உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பரிதாபி - பங்குனி - 10—4—73 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## அறநிலையங்களின் நில உடைமைபற்றி அரசுக்கு வேண்டுகோள்

### அரசின் சட்டம் :

சமய ஸ்தாபனங்களின் நிலங்களை இப்போது சாகுபடி செய்துவரும் குத்தகைதாரர்கள் 12 ஆண்டுக் குத்தகைத் தொகையை 12 ஆண்டுத் தவணைகளில் செலுத்த முன்வந்தால் அவர் சாகுபடிசெய்யும் நிலங்களை அவர்கள் சொந்தநிலமாக்கிக் கொள்ளலாம். 12 தவணைகளில் செலுத்துவதற்குப் பதிலாக ஒரே தவணையிலானால் 9 மடங்கு குத்தகைத் தொகையைச் செலுத்திவிட்டாலே போதுமானது; பிறகு நில உடைமைக் காரருக்கு அந்த நிலத்தில் எவ்வித உரிமையும் இல்லாமல் போய்விடுகிறது. இவ்விதமாக அண்மையில் நமது தமிழகச் சட்டசபைகளில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

### நிலையான பணிக்கு நிலம் விட்டனர் :

குடிகள் பணம் கட்ட ஒப்புக்கொண்டு முதல் தவணைக்குரிய தொகையைக்கட்டியவுடன் சமயஸ்தாபனங்களும் அந்தநிலங்களை

இழந்துவிடுவதாக இந்தச் சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறநிலையங்களின் உடைமையாக உள்ள அசையாச் சொத்துக்கள் ‘அழிக்க முடியாதவை, பராதீனப்படுத்த இயலாதவை, அவ்விதம் செய்ய யாருக்கும் உரிமையில்லை, மைனர் சொத்து’ என்ற கருத்தில் அமைக்கப்பட்டவை. ஆனால் இந்தச் சட்டப்படி முதல் தவணைப் பணம் கட்டினாலே ஆலயங்களுக்கு அந்தச் சொத்தில் உள்ள உரிமை இல்லாமற் போய்விடுகிறது. இதில் தனிப்பட்டவருக்கும், சமயஸ்தாபனங்களுக்கும் நிலைமையில் எவ்வித வேறுபாடும் காட்டப்படவில்லை. அடுத்தடுத்த தவணைகள் செலுத்தப்படாதுபோனால் அண்மையில் குத்தகைப் பாக்கிகளைத் தள்ளுபடி செய்ததுபோலத் தவணைகளைத் தள்ளிப் போட்டு, பிறகு கட்டவே தேவையில்லை என்று சொல்லப்பட மாட்டாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இருப்பதாகத் தெரியவில்லை. சமயஸ்தாபனங்கள் எக்காலத்தும் இருந்துவர வேண்டியவை. அவற்றிற்கு எப்போதும் இருக்கக்கூடியதாகச் சாசுவதம் என்று சொல்லக்கூடிய நிலையில் அந்தந்த சமயஸ்தாபனத்தில் உள்ள மூர்த்திகளின் பெயரால் நமது முன்னோர்களால் நில நிவந்தங்கள் அளிக்கப்பட்டு அவை பன்னூறு ஆண்டுகளாக அந்த சமயஸ்தாபனங்களின் அனுபவத்திலிருந்து வருகின்றன,

## கோயில் பணிகள் குறைபட்டால்!

ஆலயங்கள், மடங்கள் போன்ற சமயஸ்தாபனங்களின் நில உடைமைகள் பராதீனமாகிவிட்டால், அவற்றில் நடைபெற வேண்டிய பல்வேறு பணிகளுக்கும் உதவிவரும் நில வருமானங்கள் முற்றிலும் கிடைக்க வழியில்லாமல், அப்பணிகள் தடைப்பட்டுவிடும் என்று அஞ்சப்படுகிறது. மேலும் ஒழுங்காக இந்தப் பன்னிரண்டு ஆண்டுக் காலத்துக்கும் இச்சட்டத்தில் கண்டபடியே வருமானம் கிடைக்கக்கூடியதாக இருந்தாலும் அதுவரை இந்த சமயஸ்தாபனங்களில் நடைபெறும் நாள் வழிபாடுகள். சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படலாம். 12 ஆண்டுக் கால முடிவில் வருமானம் வர வழி இல்லாமையால், வெகு நீண்டகாலமாக நடத்திவரப்பட்ட இந்த வழிபாடுகள் நடத்தப்பட இயலாமல் முட்டுப்பாடு ஏற்படக்கூடும். இவ்விதம் ஆலயங்கள், மடங்களில் நடைபெறும் வழிபாடுகள் முட்டுப்பட்டு நிறுத்த வேண்டி வந்தால் அவ்விதம் ஏற்படும் ஒரு காலத்தை மக்கள் நல்வாழ்வைப் பாதிக்கும் காலமாகக் கருதுவர் நம் மக்கள்.

இதேபோன்ற ஒரு காலம் வந்தால் நாட்டில் என்னென்ன கேடுகள் வந்துறும் என்பதைத் திருமூலர் தாம் அருளிச் செய்த திருமந்திரத்தில் வெகு அழுத்தமாகக் கூறியுள்ளார். அது வருமாறு :-

“ முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே.”

இது எளிதில் பொருள் விளங்கக்கூடியதாக உள்ள செய்யுள் தான். ஆகவே இதன் விரிவு தேவையில்லை இந்த நம்பிக்கை நம்நாட்டில் வெகு ஆழமாக நம் மக்களிடம் பதிந்துள்ளதென்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆகவே பெரும்பான்மையான நம் மக்கள் மனம் துன்புறும்படி செய்வது பொருந்துவதாக இராது.

## கலைச் செல்வங்களைக் காத்தல் கடமை அல்லவா ?

நித்தியப்படி, ஏறுபடி வழிபாடுகள் செய்வதிலேயே முட்டுப்பாடுகள் ஏற்படும் என்று ஏற்பட்டபின் நமது தெய்விக ஸ்தாபனங்களாகவும் நமது பண்டைய பெருமை கலைச்செல்வங்களின் இருப்பிடமாகவும் எண்ணி இதுவரை காத்துவரப்பட்ட அவற்றின் கட்டிடங்கள் சிதைவுறும். வெளிநாட்டவரும் இக் கலைச் செல்வங்களைக் கண்டு, விண்முட்டிய கோபுரங்களையும், மாட மாளிகை அமைப்புக்களையும், அவற்றில் அமைந்துள்ள சிற்பஓவியச்செல்வங்களையும் பார்த்துப்பார்த்து வியந்து நின்றது போக அவைகளை அழியவிட்டுவிடக்கூடிய நிலை ஏற்படும். இதனால், நமது பண்டைய பெருமையை நாமே நம் காலத்தில் அழித்து விட்டதாக நம் பின்னே வருவோரும், அவற்றின் அருமை பெருமைகளை உணர்ந்த வெளிநாட்டினரும் நம்மீது பழிச் சொல் சொல்லவும் வாய்ப்பு ஏற்படும்.

## ஏழை மக்களின் இருப்பிடமே அறநிலையங்கள் :

மேலும், இந்தச் சமய ஸ்தாபனங்கள் எல்லாம் இவற்றைச் சுற்றியுள்ள ஏழை எளியவர்களுக்கும், இவற்றின் நிலங்களைப் பயிரிடும் விவசாயிகளுக்குமே பயன்பட்டு வருகின்றன. இவர்களே யல்லாது இவற்றில் தரிசனத்துக்கு வரும் பக்தர்கள், யாத்ரீகர்கள் இவர்களுக்கும் பயன்பட்டுவருகின்றன வெளிநாட்டுக்கு எங்கும் போய்விடவில்லை. இந்தஸ்தாபனங்களை நம்பிப்பிழைத்து

வரும் குடிமக்கள், ஆலயங்களில் சேவை செய்துவரும் பணி யாட்கள், அந்தந்தக் கிராமத் தொழிலாளிகள், வியாபாரிகள் முதலிய பல்லோரும் வேலையின்றித் தவிக்க நேரிடும்.

## கொடுக்கும் உரிமை வாங்கும் உரிமை :

சமய ஸ்தாபனங்களின் சொத்துக்களை வாங்கும் உரிமை கொடுத்து இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இவற்றின் சொத்தை விற்கும் உரிமை யாருக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது? இதுவரை அவ்விதம் யாருக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அரசுக்கு வேண்டியிருந்தால்கூட அவ்விதம் அவர்கள் எடுத்துக் கொள்ளும் சொத்துக்கு அன்றைய நிலவரப்படி உரிய விலை கொடுத்து எடுத்துக்கொள்ளவும், அவ்விதம் அதற்காகக் கொடுக்கப்படும் விலைத் தொகையை நிலையாக வருமானம் வரக்கூடிய நிலச் சொத்துக்களில் போட்டுவைக்கவும்தான் நாட்டுச் சட்டம், பாரம்பரியப் பழக்க வழக்கங்கள் இடமளித்து வந்திருக்கின்றன. இதல்லாமல் வேறுவிதமாகப் பணம் கொடுத்து இந்த நிறுவனங்களின் சொத்துக்களை வாங்க லாம் என்று யாரும் எண்ணுவதுமில்லை; சட்டமும், சம்பிர தாயங்களும், நியாயமும், நீதிநெறிகளும் இவ்விதமே வகுக்கப் பட்டிருக்கின்றன. ஆனல் இப்போது ஏதோ ஓர் அளவு கொடுத்துவிட்டு, பாக்கியைப் பின்பு தவணைகளில் செலுத்துவ தாகச் சொல்லிவிட்டுச் சொத்தை எடுத்துக்கொண்டுவிடலாம் என்று இப்போது உருவாக்கப்பட்டிருக்கும் சட்டத்தில்சொல்லப் பட்டிருக்கிறது. ஒப்புக்கொண்டபடி தவணை தவருது செலுத்தப் படும் என்று அரசாங்கமாவது உத்தரவாதம் தந்திருக்கிறதா? அதுதான் இல்லை. சொத்து கைவிட்டுப் போக வழி வகுக்கப் பட்டிருக்கிறதே ஒழிய, அதற்குரிய பெறுமானத்தொகை குறை யாது தவருது கிடைக்கத் தக்க ஏற்பாடுகள் உறுதி செய்யப்பட வில்லை.

## பன்னிரண்டு ஆண்டுகட்குப் பின் நிலைமை என்ன ?

அந்தந்த ஆண்டும் கிடைக்கும் வருமானத்தைச் செலவிட்டு நமது ஆலயங்களிலும் மடங்களிலும் கைங்கரியங்கள் நடத்தப்படு கின்றன. அந்தந்த ஆண்டு வருமானமே சரிவரக் காலத்தில் வராது போனல் நிருவாகத்தில் முட்டுப்பாடுகள் உண்டாகிவிடு கின்றன. குறிப்பிட்ட 12 ஆண்டுக்காலத்துக்குப்பின் இந்த வரு மானம் இல்லாமல் இந்து அறநிலையங்களில் காரியங்கள் நடத்தப் பட இயலுவது எப்படி? நிரந்தர வருமானம் இல்லாதுபோனல் இவற்றில் எல்லாக் காரியங்களும் பாதிக்கப்படத்தானே செய்யும்?

12 ஆண்டுத் தவணைகளில் கிடைக்கும் தொகையைச் செலவு செய்யாமல் வைத்திருந்தாலும் அதிலிருந்து வட்டி உயர்ந்த பட்சம் 16-ல் ஒருகுழிதானே கிடைக்கக்கூடியதாக இருக்கும். இதுவரை வந்த வருமானத்தில் ஒரு வீசம் அளவு வரும் வருமானத்தைக்கொண்டு எவ்விதம் ஆலயங்களிலும், மடங்களிலும் செய்யவேண்டிய கைங்கரியங்கள் முதலியன முறையாக நடத்துவது இயலும்? இதனால் எத்தனைபேர்களின் நிலை பாதிக்கப்படும்?

## இதுவரைக் கண்டும் கேட்டும் இராத சம்பவம்!

இதுவரை அரசாங்கத்தில் இயற்றப்பட்ட சட்டங்களின் பயன் இதைப் போலச் சொத்துரிமை இல்லாமல் செய்யப்படவில்லை. நில உடைமைகள் எவ்விதம் நிரந்தரமானதென்று கருதப்பட்டதோ அதேபோல அரசு எடுத்துக்கொண்ட சொத்துக்களிலிருந்து வந்த வருமானம் தடைப்படாமல் நிரந்தரமாக ஆண்டுதோறும் அரசாங்கமே அதற்குரிய வருமானத்தைக் கொடுக்கவேண்டியதென்றுதான் சட்டங்கள் இயற்றப்பட்டன. 12 ஆண்டு வருமானம் வந்தால் போதும், பின்னர் ஆலயங்கள் முதலிய சமய ஸ்தாபனங்கள் எப்படியாவது போகட்டும் என்ற நினைப்பின்கீழ் செய்யும் செயல்போல இப்போதுதான் நடந்துள்ளது.

## அறவுணர்வு பெருக வழி உண்டா?

அறநிறுவனங்களின் சொத்துக்கள் நிரந்தரமானதென்று இவ்வளவு காலமும் அரசும் மக்களும் எண்ணி அறக்கட்டளைகள் பல ஏற்படுத்தியுள்ளார்கள். அவைகளைக் காப்பாற்றிவரும் பொறுப்பை அரசு ஏற்றுப் பாதுகாத்து வந்துள்ளது. இச்சொத்துக்கள் பெரும்பாலும் ஆலயங்களுக்கும், மடங்களுக்கும் முற்காலத்தில் மன்னர்களாலும், பக்தர்களாலும் வழங்கப்பட்டவை. நம் தமிழ் நாட்டில் மன்னர்கள் ஆண்ட காலத்தில் ஆலயங்கள் முதலிய அறநிலையங்களின் நிருவாகத்துக்கு முதலிடம் கொடுத்துப் பாதுகாத்து வந்தனர் என்பதையும், அவற்றுக்கு நில நிவந்தங்களும், பிறவும் அளித்துக் காப்பது தமது கடமைகளாக ஏற்று நடத்திவந்தார்கள் என்பதையும் நமது அரசு அது வெளியிட்டிருக்கும் அறிக்கைகளில்கூட ஏற்றுக்கொண்டிருக்கின்றது. பிறகு அன்னியர் ஆட்சியில் நமது நாடு அடிமைப்பட்டபோதுகூட அவ்வரசுகள் நமது சமய நிறுவனங்களின் நிருவாகத்தில் தலையிடாது, அவைகளின் சொத்துக்களுக்குக் கேடு எதுவும் வாராது காத்து வந்தன. இவை செம்மை

யாக அவையவை எந்தெந்தக் குறிக்கோளின் கீழ் நிறுவப் பட்டனவோ அக்குறிக்கோள் முறையாகக் காக்கப்படவேண்டு மென்று சட்ட திட்டங்களும் இயற்றிவந்திருக்கின்றன.

அறத்தைப் புரப்பதே அரசு கடன்.

இவ்விதம் அரசு அதிகாரத்தின் கீழ் இந்தச் சொத்துக்கள் காக்கப்படவேண்டியதிருக்க அவை அழிய வழி கோலுவது தேச நலத்துக்கு உகந்ததல்ல. சமய நிலையங்கள் குடிமக்களுக்கோ, நாட்டு மக்களுக்கோ நன்மை செய்வதில் நாட்டங்கொண்டிருந் தனவே ஒழிய, எந்தநாட்களிலும் சமய ஸ்தாபனங்கள் அவர் களின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்ததில்லை. இனியும் இருக்கமாட்டா. அம்மக்களின் நன்மை சிறப்பதில் நமது சமய ஸ்தாபனங்கள் குறுக்கிடா. எந்த வகையிலும் நமது சமய ஸ்தாபனங்களின் வருவாய் குறையக்கூடாது. எந்த அளவு குறைந்தாலும், அந்த அளவுக்கு வேறுவகையில் ஈடுசெய்ய எந்த அரசும் கடமைப்பட்டுள்ளது. இதுவரை செய்யப்பட்ட சட்டதிட்டங்கள் அனைத்திலும் வருவாய் குறையாமல் நிரந்தர மாக வருமானம் கிடைத்துவர ஆவன செய்ய வழிவகைகள் இயற்றப்பட்டன. இந்தச் சட்டத்தின் மூலம்தான் சொத்து முழுவதும் பராதீனமாகி விடுகிறது. சமய ஸ்தாபனங்களுக்குச் சொத்தேயில்லாமல் செய்யப்பட்டிருப்பதுடன் கிடைத்துவந்த வருமானத்தையும் கிடைக்க வேறுவழிவகை செய்யப்படாமல் விடப்பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் அரசுசிந்தித்துப் பாது காப்பு அளிக்கும் வகையில் திருத்தங்கள் கொண்டு வந்து நிரந்தரமாகப் பரிகாரம் கிடைக்கச் செய்யும் என்று நம்புகிறோம்.

* * *

## அரசின் சிந்தனைக்கு:

உண்மை என்றும் நிலைத்தது. பொய்மை என்றும் நிலை யாதது. என்றும் நிலையாக உள்ள பொருள்கள் கடவுள், உயிர் கள், உலகம் என்பனவாம். நிலையாக உள்ள பொருள்களின் நிலைகளைப்பற்றி, ஏற்றத்தாழ்வுகளைப்பற்றி, அவை வருதற்குரிய காரணம்பற்றி, அவற்றை நீக்குதற்குரிய உபாயம்பற்றித் திறம்படக் கூறுவதே அறம். எனவே அறமும், அறத்தால் கூறப்பெறும் பொருள்களும் நிலையுடையன. எனவேதான் அறநிலையங்களுக்கு உலகியலில் நிலைத்ததாக உள்ள நிலங் களையே பாதுகாப்பான முதற்பொருளாக முன்னோர்கள் அமைத் துள்ளனர். இதிலிருந்து நம் முன்னோர்களின் அறப்பற்றும்,

அறநிலையங்களின் வளர்ச்சியில் உள்ள பக்தியும், ஈடுபாடும் நன்கு தெளிவாகும். இவ்வற நிலையங்களின் சொத்துக்கள் கடவுளுக்கு நேரே பயன்படுவன அல்ல. மக்களுக்கே பயன் படுவன. நிரந்தரச் சொத்துக்கள் அமைத்து வழிபாடு முதலிய வற்றை என்றும் நிலைத்து நடைபெற ஏற்பாடு செய்திருப்பது மக்களின் நன்றியுணர்வை - விசுவாச உணர்வை - தியாக உணர்வை - பண்பாட்டு உணர்வைக் காட்டுவதற்காகவே என்பது சிந்திப்பார்க்கு தெளிவாகப் புலனாகும்.

## தனி மனித உரிமையல்ல :

ஒரு குழந்தை, தாய் தந்தையர் கொடுக்கின்ற பொருள் களை, தாய் தந்தையர் கேட்டபோதும், கேளாதிருக்கும் போதும் அக்குழந்தை மனமகிழ்வோடு பெற்றோர்களுக்குக் கொடுக்குமேயானால் பெற்றோர் அகம் மிகமகிழ்வர் என்பதை அனைவரும் அறிவர். இக்குழந்தை கொடுப்பது பெற்றோர் களுக்குத் தேவையில்லாத ஒன்று. இருந்தபோதிலும் அப்பிள்ளை யின் அன்பையும், பண்பையும், தியாக உணர்வையும், வளர்ப் பதற்காகவே அன்போடு அதனை ஏற்கின்றனர். மேலும் குசேலர் கொண்டுசென்ற அவலை எப்படிக் கண்ணபிரான் ஏற்றாரோ, கண்ணப்பர் கொண்டுசென்ற ஊனினைக் காளத்தி யப்பர் எதற்காக ஏற்றாரோ? அதுபோலவே நம்முடைய பண்பை வளர்த்தற்பொருட்டே அபிஷேக ஆராதனைகளும் நிவேதனங் களும் செய்கிறோமேதவிர, ஆண்டவன் வளர்வதற்காக அல்ல. மாணவர்கள் பள்ளிக்குச் சென்று பயில்வது மாணவர்களின் நலம் கருதியே தவிர, பள்ளியின் நலத்தையோ, ஆசிரியரின் நலத்தையோ கருதியது அல்ல. மாணவன் உயர்வைக் கருதியே என்பது அனைவரும் அறிந்ததே. எனவே அறநிலையங்களின் சொத்துக்கள் ஆண்டவனுக்கோ அல்லது தனிமனிதனுக்கோ உரியன அல்ல; மக்கள் நலத்திற்கு, சமுதாய நலனுக்கு என்பது நன்கு புலனாகும். மன்னர்களின் சொத்துக்கள் ஜமீன்தார்களின் சொத்துக்கள், மிராசுதார்களின் சொத்துக்கள் போன்று அற நிலையங்களின் சொத்துக்கள் தனிமனித உரிமை அல்ல. எனவே இதனைச் சிந்தித்து மறுபரிசிலனை செய்து தக்கவகையில் பரிகாரம் காணவேண்டியது அரசின் தலையாய கடமை.

உ

குருபாதம்

தருமையாதீனம்
சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்
திருமுலைப்பால் திருவிழாவில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தேவகோட்டை திரு. தியாகராசப் பிள்ளைக்கு

"திருமுறைக்கலாநிதி" என்னும் பட்டம் வழங்கி
ஞானசம்பந்தர் வரலாற்று அற்புத நிகழ்ச்சிகளைத்
தொடங்கிவைத்து வழங்கியருளிய

# வாழ்த்துரை

வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறை விளக்கம் பெறவும், இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன் திருவவதாரம் செய்தார் திருஞானசம்பந்தர். பல பிறவிகளில் செய்த நல்வினைப் பயனால் மூன்று வயதிலேயே அம்மையளித்த சிவஞானப் பாலமுதுண்டு, உலகம் உய்ந்து கடைத்தேறுதற் பொருட்டுத் தேவாரத் திருமுறைகளை அருளிச் செய்தார். இவர் சிவஞானப் பாலுண்ட இத் திருநாளைப் பன்னெடு நாட்களாகச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடுகின்றோம்.

ஒருவர் அழுகை பலருக்கு மகிழ்ச்சி.

சமய ஆசாரியர்களைப் போற்றி வழிபடுவது சமய வளர்ச்சிக்கு உறுதுணை புரியும். வையகம் அனைத்தும் துயர்தீர்ந்து மக்கள் நல்வாழ்வு பெறுதற் பொருட்டு வாழ்ந்தருளிய ஞானசம்பந்தர் போன்ற பெருமக்களை உலகம் நன்றியோடு வழிபடக் கடமைப்பட்டுள்ளது. ஞானசம்பந்தர் அன்று அழுததால்தான் இன்று நாம் மகிழ்ச்சியோடு வாழ்கின்றோம் பிறந்த குழந்தை அழுதால்தான் பெற்றோர் சிரிப்பர். குழந்தை அழமறந்தால் உற்றோர் அழுவர் என்று கூறுவார்கள். ஞானசம்பந்தர் அழுகையால் உலகமே மகிழ்ச்சியுற்றது. என்று கூறுகின்றார் சேக்கிழார்.

'கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை யொலிபெருக எவ்வுயிரும் குதுகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமிஅழு தருளினர்'

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

## குழப்பம் நீங்கத் துணை புரியும்.

ஞானசம்பந்தரைப்பற்றிய நினைவு குழப்ப காலங்களுக்குத் தெளிவுதரும் அரிய சாதனமாகும். அவர் அவதரித்தருளிய காலம் சமயக் குழப்பம், சமுதாயக் குழப்பம், அரசியல் குழப்பம் என்று நாடு பல்வேறு இடர்ப்பாடுகளில் இருந்த காலம். ஞான சம்பந்தர் அவதரித்தபின் அக் குழப்பங்கள் விலகி நாட்டில் தெளிவுநிலை ஏற்பட்டது. ஞானக் கதிரவனுகிய இவர் பிறந் தருளிய பின்னர் புறச்சமய இருள் விலகி ஓடிற்று. சமுதாயத் தில் ஒற்றுமை, நம்பிக்கை, தொண்டுள்ளம் முதலியன வளர்ந் தன. அரசியல் சூழ்நிலை திருத்தம் பெற்றது. ஞானசம்பந்தரை நாம் போற்றினல் நமக்குள்ள அறிவுக் குழப்பங்கள் மனக்குழப் பங்கள் விலகிப்போகும். இன்றைய வாழ்வியலில் எல்லாத் துறைகளிலும் குழப்பங்கள் ஏற்பட்டு மக்கள் மனவளர்ச்சி சீர்கேடடைந்து வருகின்றது. இக் குழப்பங்கள் அனைத்தும் விலக, மன நலம் சிறக்க ஞானசம்பந்தர் விழா துணைபுரியும்.

## ஞானசம்பந்தர் வழங்கும் முறை.

இத்தகைய விழாக் காலங்களில் ஈடுபடும் அன்பர்களாவது தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்திக்கொள்ள சில முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். ஞானசம்பந்தர் என்ற பெயரின் பொருளை உணர்ந்து அதைப் போற்றுதற்காகவாவது உறுதி யெடுத்துக்கொள்ளவேண்டும். 'சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் ஆகியவற்றை அம்பிகை திருமுலைப்பாலில் கலந்துகொடுக்க உண்ட அவர், சிவஞானசம்பந்தர் ஆயினர். இன்றும் அவர் பெயரைப் பொருள் உணராமல் வழங்குவோர் பலர் உள்ளனர்; 'சம்மந்தர்' என்று பகரத்திற்குப் பதில் மகரத்தை இட்டு எழுதுவோரும் பேசுவோரும் உள்ளனர்.

## நிறைமொழிமாந்தர் மறைமொழியே மந்திரம்.

ஞானசம்பந்தர் என்ற பெயர் ஒற்று நீக்க ஐந்தெழுத்தாக விளங்குவது. நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மணிவாசகர் என்ற திருப்பெயர்களும் இவ்வாறே ஐந்தெழுத்துக்களாக விளங்குவன. இவற்றைப் பக்த பஞ்சாக்ஷரம் என்பர். ஞானசம்பந்தர் என்ற

பெயரை 'நாம மந்திரம்' என்று கூறுகிறார் சேக்கிழார். மந்திரம் என்ற சொல்லுக்கு நினைப்பவரைக் காப்பது என்பது பொருள்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்பது தொல்காப்பியம். அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைத் தந்தே விடும் மொழியுடையார் நிறைமொழி மாந்தராவர். அவர்கள் அருளியவை அனைத்தும் மந்திரங்கள் என்றே மதித்தற்குரியனவாகும்.

## மெய்யறிவு எது?

இறைவனை முக்கரணங்களாலும் பக்தி செய்தவர் ஞானசம்பந்தர். உள்ளத்தால் - வாயால் - மெய்யால் பொய்யாதொழுகியவர் ஞானசம்பந்தர். மனம், வாக்கு காயம் ஆகிய மூன்றும் தூயனவாக இருந்தால்தான் இறைவன் திருவருளைப்பெறமுடியும். "உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார், உள்ளத்துளெல்லாம் உளன்" என்று வள்ளுவர் கூறுகின்றார். பொய் - மாறுபடுவது; மெய் மாறுபடாதது. மெய்ப்பொருளாக உள்ளவை கடவுள், உயிர்கள், உலகம் என்பன. பதி பசு பாசம் என்ற முப்பொருள்களின் இயல்புகளை அறிவதே மெய்யறிவு. நம் உடல் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் இயன்றது. அவரவர் செய்த கன்மங்களுக்கு ஏற்ப இறைவன் உடல் உறுப்புக்களைத் தருகின்றான். கர்மம் என்பது அவரவர் செய்யும் செயல்களாகும். நல்லகர்மம் - புண்ணியம். தீயகர்மம் - பாவம். இவ்விருவினைப் பயன்களின்படியே உலகில் உயிர்களின் நன்மை தீமைகள் நிகழ்கின்றன. பாவம் செய்தவர் துன்பமடைவர். புண்ணியம் செய்தவர் இன்பம் அடைவர். முப்பொருள்களின் உண்மையியல்புகளை உள்ளவாறறிந்து இறைவன் திருவடி அடைதலே உயிர்கள் பெறுதற்குரிய பயனாகும். அத்தகைய இறையருளைப் பெறுதற்கு இறைவழிபாடு இன்றியமையாதது.

"பல்லூழி காலம் பயின்றரனை அர்ச்சிக்கில்
நல்லறிவு சற்றே நகும்."

என்று கூறுகின்றவாறு இறைவனை இடைவிடாமல் நினைப்பதும் வாழ்த்துவதும், வழிபடுவதுமே ஞானம் பெறுதற்கு உரிய வழிகளாகும்,

## குரு லிங்க சங்கமம்.

சீகாழி சிறந்த தலம். குரு லிங்க சங்கமத்தலம் என்று இதனைச் சிறப்பித்துக் கூறுவர். தோணியப்பர் - குருமூர்த்தம். பிரமபுரீசுரர் - இலிங்க மூர்த்தம். சட்டைநாதர் - சங்கம மூர்த்தம்

என்ற நிலையில் இத்தலம் சிறந்து விளங்குகிறது. ஞானசம்பந்தர் உலகம் உய்தற்பொருட்டுத் தாம்பெற்ற அருளனுபவங்களை நாமும் பெற்றுய்தற் பொருட்டுத் தேவாரத் திருமுறைகளை அருளிச் செய்தவர். அப்பெருமான் திருவருளினால் உலகம் சமய நெறியில் நின்று சிறப்புற வேண்டும் என்பதுதான் நமது எண்ணம்.

துன்பம் வரும்போதுதான் மனிதன் திருந்துகின்றான். சுடச்சுடரும் பொன்போல் ஒளிபெறுகின்றான். இன்பகாலத்தும் துன்பக் காலத்தும் இறைவனை மக்கள் மறவாது போற்றுதல் வேண்டும். துன்பம் வரும்போது தளராது நம் பக்தி உரம் பெறுமாறு செய்துகோடல்வேண்டும். இத்தகைய அருள்விழாக் களில் ஈடுபடுவதன்மூலம்தான் நம்பக்தி மேலும் உறுதிப்படும்.

ஞானசம்பந்தர் திருவிழாவை 15 ஆண்டுகளாக ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மிகச் சிறப்பான பல திட்டங்களுடன் அற்புத விளக்க விரிவுரைகளோடு நிகழ்த்தியருளினார்கள். அவர்கள் திருவுள்ளம்போல இவ்விழா, சிறப்புற நிகழ்கிறது.

பண்சுமந்த பாடகர்க்குப் பரிசு :

ஞானசம்பந்தர் விழாவில் ஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பணியை ஞாலமெல்லாம்பரவச்செய்யும் தொண்டரைப் பாராட்டு வதுதான் ஞானசம்பந்தருக்கு மிக உகந்ததாகும் என்றமுறையில் ஆண்டுதோறும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருமுறைப் பண்ணிசைவாணர் ஒருவர்க்குத் " திருமுறைக்கலாநிதி " என்ற பட்டமும் பொற்பதக்கமும் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பணமுடிப்பு வழங்குவது என்ற திட்டத்தை அமைத்தருளினர் கள். இதுபோலத் திருவாமூரிலும் அப்பர் சுவாமிகள் குருபூசை விழாவில் திருமுறைப் பண்ணிசைவாணர் ஒருவர்க்குப் பட்டமும் பணமுடிப்பும் வழங்கும் திட்டத்தை வகுத்தருளினார்கள். அன்று இறைவன் திருவீழிமிழலையில் ஞானசம்பந்தருக்கும் அப்பருக்கும் பொற்காசுகள் வழங்கினான். அதனை நினைவுறுத்துவதுபோல இவ்விரு விழாக்களில் திருமுறை ஓதுவார் இருவர் பரிசில்பெற்று வருகின்றனர்.

இந்த ஆண்டு இச்சிறப்பைப் பெறுபவர் இத்தலத்தில் பயின்று தேவகோட்டையில் திருமுறைப் பணிபுரியும் திரு. தியாகராசப்பிள்ளை ஆவார். அவருக்குத் " திருமுறைக்கலாநிதி " என்ற பட்டத்தை ஞானசம்பந்தருடைய நல்லாசியோடு வழங்கு கின்றோம்.

விழாவிற் பங்குகொள்ளும் அன்பர்கள் அனைவரும் எல்லா நலங்களும் பெற்று இனிது வாழ, திருஞானசம்பந்தப்பெருமான் திருவருளை எண்ணி வாழ்த்துகிறோம்.

# புத்தாண்டே வருக!

## புலவர், திரு. இரா. செல்வக்கணபதி

பெரிதான மொழியோடு தமிழர் வாழ்வும்
பீடுற்றுச் சிறந்தோங்க; நிகழ்ந்து போன
பரிதாப நிலையெல்லாம் தூள்தூள் ஆக,
பார்போற்றப் பிரமாதி யோர்நல் வாழ்வில்,
உரிதான நலம்பெற்றும் உழைப்பை ஈந்தும்
ஒப்பற்ற திருநாட்டின் மேன்மைக் காக
அரிதாக உழைக்கின்ற தமிழர் வாழ்வில்
அடிவைக்கும் புத்தாண்டே வரவேற் கின்றோம்;

மழைஈந்து; விளைவித்து; மக்கள் வாழ்வில்
மாறாத ஒளியீந்து; மாட்சி ஈந்து;
குழைகின்ற நெஞ்சத்துள் இறைமை என்னும்
குணமீந்து; அருளீந்து; வாழ்வில் எங்கும்
தழைகின்ற நலமீந்து; கல்வி ஈந்து;
தளராத உழைப்பீந்து; செல்வ மீந்து;
விழைகின்ற நலமெல்லாம் வெறுப்ப ஈந்து
வெற்றிமிகு ஆண்டென்ற புகழைச் சேர்ப்பாய்!

புத்தாண்டே வந்திடுக! வளங்கள் கூறி
புகழ்பேசிக் கைகூப்பி வரவேற் கின்றோம்!
தித்திக்கத் தித்திக்க எங்கள் வாழ்வில்
தெவிட்டாத நலமீந்து சிறப்புச் செய்வாய்!
எத்திக்கும் புகழோடு சைவம் ஆக்கும்
எழில்ஞான சம்பந்தம் என்றும் பெற்று
முத்திக்கு வழிதேடும் அன்பர்க் கெல்லாம்
மூள்கின்ற மகிழ்வோடு வாழ்த்துச் சொல்வோம்!

# திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.

(மலர் 32. இதழ் 4. பக்கம் 191 - இன் தொடர்ச்சி)

எட்டாவது குறள்,

"ஒண்பொருட்க ணுற்றூர்க் குறுபயனே அல்லாத
கண்படுப்போர் கைப்பொருள்போற் காண்"

எனவரும்.

இதன் பொருள் :- ஒண்பொருட்கண் உற்றார்க்கு உறுபயனே அல்லாத - ஞானமே வடிவான மெய்ப்பொருளில் அழுந்தினவர்கட்கு அதனால் வரும் பயன் ஒன்று தவிர ஏனைய யாவும்; கண்படுப்போர் கைப்பொருள் போல் - உறங்கினவர் கையில் இருந்த பொருள் போல்வனவாம்.

விளக்க உரை :- அஃதாவது, அவரறியாதவாறு அவரை விட்டு நீங்குவனவாம். 'தவிர' என்பது சொல்லெச்சம். 'உறு பயன் இது' என்பது, வருகின்ற குறளிற் கூறப்படும். 'உறு பயன் ஏய்' எனப் பிரித்து, 'ஏய் என்பது முதனிலைத் தொழிலாகு பெயர்' எனக் கொண்டு, அதற்கு, 'பொருந்துகின்ற இன்பம்' என்பது பொருளாக வேறு தொடராக்கி உரைத்தார் நிரம்ப அழகிய தேசிகர். 'அல்லாத' என்பதே பாடம் என்பதை அவர் உரையால் உணர்க.

'ஏனைய யாவும்' என்றதனால், உலகியல் ஒழுக்கங்களே யன்றித் தவ ஒழுக்கமும் அவ்வாறு நீங்குவனவாதல் அறியப்படும். மேல், 'பேய் ஒன்றுந் தன்மை' என்ற உவமை இவை நீங்குமாற்றிற்கு நிரம்பாது என்னும் கருத்தால், கண்படுப்போர் கைப்பொருளாய வேறு உவமை கூறினர். ஆகவே, 'சிறிதானும் தன்முனைப்பால் அவை எஞ்ஞான்றும் தாமாக விடப்படுவன அல்ல' என்பதும், 'விடிற் குற்றமாம்' என்பதும் பெறப்பட்டன. இவ்வாறே இவர் சங்கற்ப நிராகரணத்திலும், "பாலர் உன்மத்தர் பாசாசரில்" என்றதனோடு அமையாது,

"உறங்கி னேன்கை வெறும்பாக் கெனவும்"

எனக் கூறி,

"தானே தவிரா தானல், புரியா
தொழிந்திடில் நிரயத் தழுந்துதல் திடமே"

என்றூர்

"கண் படுப்போர்" என்றது, 'கண்ணை மூடுவிப்போர்' எனப் பொருள் தந்து, 'உறங்குவோர்' என்பதைக் குறித்து நின்றது. 'போல்' என்னும் முதனிலை, 'போல்வன' என முற்றுப் பொருள் தந்தது. காண், முன்னிலை யசை. அன்றி, 'கண்படுப் போர் கைப்பொருள் போல்வனவாக அறி' என்று உரைத்தலும் ஆம்.

இதனல், உயிர் இன்புறு நிலைக்கண் அவ்வின்ப நுகர்ச்சி யன்றிப் பிறிதொன்றும் இல்லாமை கூறப்பட்டது.

ஒன்பதாவது குறள்,

"மூன்றுய தன்மைஅவர் தம்மின் மிகமுயங்கித்
தோன்றுத இன்பம்அதென் சொல்"

எனவரும்.

இதன் பொருள் :- அது - மேல், "உறு பயன்" எனப்பட்ட அப் பயனுவது; அவர் - மேல், "ஒண் பொருள்" எனப்பட்ட சிவனும், "அதன்கண் உற்றூர்" எனப்பட்ட சீவரும் ஆகிய அவ் இரு திறத்தவரும்; தம்மின் மிக முயங்கி - தம்முள் மிகவும் கலத்தலால்: மூன்றுய தன்மை தோன்றுத இன்பம் - நுகர்வானும்- நுகர்ச்சி அறிவும், நுகரப்படு பொருளும் ஆகிய மூன்றும் வேறு வேருய் உள்ள தன்மை தோன்றுத (நுகரப்படும் பொருளாகிய சிவம் ஒன்றுமே தோன்றுகின்ற) பேரின்பமாம். சொல் என்' அவ்விடத்துச் சொல் எழுதற்கு வழி யாதுளது? (ஒன்றுமில்லை.)

விளக்க உரை :- மிகக் கலத்தலாவது, வேற்றுமை சிறிதும் தோன்றுதவாறு ஒன்றுதல். இந்நிலை, மேல் "தாடலைபோல்" (குறள் - 74.) என்றவிடத்து விளக்கப்பட்டது. 'முயங்குதலால்' என்பது, "முயங்கி" எனத் திரிந்து நின்றது. எனவே, 'மூன்றுய தன்மை தோன்றுமளவும், கீழ், மேல், புடை என்பன இன்றி, யாண்டும் வெளியறக்கோத்து ஆன்மாவை விழுங்கிப் பெருகும் வெள்ளமாய பேரின்பம் விளையாது; சிறிதின்பமே

விளையும்' என்றற்கு, 'மூன்றாய தன்மை தோன்றாத இன்பம்' என உடம்பொடு புணர்த்து ஓதுகின்றவர், 'உளவாய அவை தோன்றாதொழிதல் எவ்வாறு' என ஐயுறுவார்க்கு, 'முன்னர்க் கூறிய ஒன்றுதலால் அவை தோன்றா' என அஃது ஏதுவாதலை உணர்த்தி, ஐயமறுத்தவாறாயிற்று. "அதென்" என்பதில் முற்றியலுகரம் உயிர் வரச் சிறுபான்மை கெட்டது. "புலாஅல் பிறிதொன்றன் புண்ண துணர்வார்ப்பெறின்" *(1) என்பதிற் போல. "சொல் என்" என்றது, இந்நிலை எய்தினார், இயல் பாகவே வாய் வாளாமை (பேசாமை - மௌனம்) உடையராவர் என்பதுணர்த்தி, அவரை அறியுமாறு கூறியதாம்.

"பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான் - பேசாதே
எண்ணொன்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால்
உண்ணின்றும் போகான் உளன்" * (2)

என்றதும் இந்நிலையையே என்க. இவ்வாறாகவே, பேச்சு எழுவதாகவும், அஃது எழாதவாறு அடக்கி வாய் வாளாதிருப்ப வர் இந்நிலையை அடைதற்கு முயல்பவர் (சாதகர் என்பது அறியப்படும். பேச்சற்ற நிலையே அதீதம். ஆகவே, பேசும் நிலை துரியமாம் என்க.

இதனால், மேல் "உறு பயன்" எனச் சுட்டிய பயன் இது என்பதும், அதன் பெருமை இன்னது என்பதும் கூறப்பட்டன.

---

*(1) திருக்குறள் - 257. ‡ (2) திருக்களிற்றுப்படியார் - 28.

(தொடரும்)

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமையாதீனம்

### ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

தருமை ஆதீன ஆலயங்கள் மிகவும் தூய்மையாகவும் சிறப் பாகவும், கண்காணிக்கப் படுவதை இத்திருக்கோயிலைக் கண் டாலே தெள்ளிதிற் புலனாகும். சரபேசுவரமூர்த்தி மிகவும் அற்புத மூர்த்தியாகவே காட்சியளித்தார். இவ்வரிய பெரிய திருக்கோயிலைத் தரிசிக்கும் பெரும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்ததே ஆண்டவன் அருள்.

(ஒ-ம்) வ. சிவசுப்பிரமண்யம்,
தலைமை தணிக்கை அதிகாரி, சென்னை.
(அறநிலையப் பாதுகாப்புத்துறை)

திருவாமூரில்

# அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

" தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே "

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியுடன் திருநாவுக்கரசு சுவாமிகள் அவதாரத் தலமாகிய திருவாமூரில் – அப்பர் திருக்கோயிலில் வரும் 26—4—'73 வியாழக்கிழமை முதல் 28—4—'73 சனிக்கிழமை முடிய மூன்று நாட்கள் அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாக நடைபெறும். மூன்றுநாட்களிலும் சிறந்த முறையில் அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனைகள் முதலியன நிகழும்.

## குருபூசைத் திருநாள் 28—4—73

28—4—'73 சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு அப்பர் சுவாமிகளுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்னிலையில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழும்.

திருமுறை மாநாடு, திருமுறைப் பாராயணம், கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமண்டபம் முதலியனவும், பொம்மலாட்டம், நாட்டிய நாடகம், பண்ணிசை யரங்கு முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவிற்குக் காணிக்கைகள், நன்கொடைகள், அளிக்க விரும்புவோர், காசாளர், அப்பர் குருகுலம், தருமையாதீன சமயப் பிரசார நிலையம் 41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை என்ற முகவரிக்கும், அபிஷேகப் பொருள்கள் மாகேசுவர பூசைக்குரிய பொருள்கள் அனுப்ப விரும்புவோர் :- காசாளர், அப்பர் சுவாமிகள் திருக்கோயில், திருவாமூர், பண்ணுருட்டிவழி, தெ. ஆ. மாவட்டம் என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

# சிரிக்கும் திறம்

## நீதிபதி, கனம். S. மகராஜன் M. A., B. L,

பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள்ளே போய்க் கவனித்தால், ஒரு சுவையான உண்மை துலங்கும். அங்குள்ள நோயாளிகள் பலர் நம்மைப் பார்த்துப் "பைத்தியமே" என்று அழைப்பார்கள். நாம் பைத்தியமில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், அந்தப் பைத்தியக்காரர்களோ நாம் எல்லோரும் பைத்தியம் பிடித்தவர்கள் என்று உறுதியாக நம்புகிறார்கள். அவர்களுடைய உறுதிப்பாட்டை எளிதில் அசைக்க முடியாது. எப்போது அந்த உறுதிப்பாடு தளர்கிறதோ, எப்போது அந்த நோயாளிகள் தமக்கு உள்ளத்தில் நோய் பிடித்திருக்கிறது என்று எண்ணத் தொடங்குகிறார்களோ, அப்போதுதான் அவர்களுடைய நோய் குணப்பட்டு வருகிறது என்று வைத்தியர்கள் சொல்லுவார்கள்.

தலைமயிரைப் பிய்த்துக்கொண்டும் கட்டியிருக்கும் வேட்டியைக் கிழித்தெறிந்துகொண்டுமிருக்கிற பைத்தியக்காரன், தலையலங்காரம் செய்து, சீருடையணிந்து, காரண காரியத் தொடர்போடு சிந்திக்கும் வல்லமை பெற்ற நம்மைப் பார்த்து, "அட, பைத்தியமே" என்று அழைக்கும்போது, நமக்குச் சிரிப்பு வருகிறது. பைத்தியம் நமக்கில்லை, அவனுக்குத்தான் என்ற தெளிவிலிருந்து வருகிறது நம்முடைய சிரிப்பு.

நாம் பைத்தியக்காரர்கள் இல்லை என்பதை அறிந்து பெருமைப்பட வேண்டியதுதான். ஆனாலும், நம்முடைய சிந்தை நோயற்றது என்று சொல்ல முடியாது. அதற்குள்ளே எத்தனையோ திருகல்கள், கோணல்கள்! பித்தமயக்கத்தால் ஒன்றை மற்றொன்றாக நாம் காண்கிறோம். ஆணவ மயக்கத்தால் எல்லாம் நம்முடைய செயல் என்று நாம் நம்புகிறோம், உறுதியாகவே நம்புகிறோம். அந்த ஆஸ்பத்திரிக்குள்ளே பார்த்தோமே, அவர்களுடைய உறுதிப்பாடு நமக்கும் இருக்கிறது. இந்த உறுதிப்பாடு எப்போது தளர்கிறதோ, நமக்கும் பித்த மயக்கம் இருக்கிறது என்று எப்போது நாம் உணரத் தொடங்குகிறோமோ, அப்போதுதான் நமக்கு நோய் குணப்பட்டு வருகிறது என்று ஞான வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

பித்தத்திலிருந்து தெளிந்தவர்கள் ஞானிகள்; எல்லாம் இறைவன் செயல் என்பதை ஸ்வானுபவத்தில் உணர்ந்தவர்கள் அவர்கள். ஆனால், நாம் அவர்களைப் பார்த்து, "நீங்கள் பித்தர்கள்" என்று சொல்லுகிறோம். பித்தம் இருப்பது நம்

மிடத்தில்தான் என்று தெளிந்தவர்கள் ஞானிகள். அந்தத் தெளிவிலிருந்து பிறக்கிறது அவர்களது தெய்வீகச் சிரிப்பு.

மாணிக்கவாசகர் சிறந்த ஞானி; பித்த மயக்கத்திலிருந்து விடுபட்டவர்; இறைவனுடைய திருமேனியைக் கண்டு பேரானந்தம் அடைந்தவர். ஆனந்தக்களிப்பிலே அவர் தன்னுடைய அனுபவங்களை உலகத்தாருக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். என்ன சொன்னார்?

“இறைவன் எனக்குக் காட்சி கொடுக்கிறான், பாறுங்கல் போன்ற என் இதயத்தைப் பிசைந்து உருக்கிவிட்டான், ‘இதைச் செய், அதைச் செய்’ என்று கட்டளையிடுகிறான். அவனுக்குப் பணி செய்வதிலே எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது!” என்றெல்லாம் சொல்லி வந்தார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அண்டை வீட்டுக்காரர்கள் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள். அவர் வாக்குமூலத்தை அவர்கள் நம்பவில்லை. “விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்குமே தென்படாத கடவுள் இந்த மாணிக்கவாசகரிடத்திலே வந்து பேசுகிறாராம், இவர் உள்ளத்தை உருக்கிவிட்டாராம், இவரைப் பணி கொள்ளுகிறாராம் பேஷ், பேஷ், பித்தம் தலைக்கேறி விட்டது இவருக்கு,” என்று ஊரார் சிரிக்கத்தொடங்கினார்கள்.

இந்தச் சிரிப்பை நினைத்து நினைத்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர். பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே உள்ளவன் நம்மைப்பார்த்து, பைத்தியம் என்று சொல்லிச் சிரித்தானே, அதை எப்படி நாம் அனுபவித்தோம், அதைப்போலவே நம்முடைய அசட்டுச் சிரிப்பைப் பார்த்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர்.

“ அரிக்கும் பிரமற்கும்
அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி
நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும்
என்பதுகேட்டு உலகமெல்லாம்
சிரிக்கும் திறம்பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ.”

பித்தர்கள் சூழ்ந்த இவ்வுலகத்திலே, நமக்குப் பித்தம் தெளியும்படி செய்துவிட்டானே அந்த அருளாளன் என்று தெரிந்ததும், “அடி, முழக்கு, தெள்ளேணம் கொட்டு” என்று மாணிக்கவாசகர் ஆர்ப்பரிக்கிறார். நன்றியும், பக்தியும், ஹாஸ்யமும் கலந்த பாடல் இது, அபூர்வமான பாடல்.

# பயனும் சிறப்பும் கூறியது

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

ஓர் இரவலன் வருகிருன். நம்மிடம் கொடுக்கும் பொருள் இல்லே. ஆனுலும் இனிய சொல்லாவது சொல்ல வேண்டும். அதுவுமா இல்லாமல் போயிற்று.

நம்மிடம் பெரியோர்கள் வந்தார்கள் என்று வைத்துக் கொள்வோம்; முன்பின்பாராமல் உடனே எழுந்து எதிர்கொண்டு ஓடிப்போய், 'தாங்கள் எழுந்தருளப் பெற்றதால் என்ன புண்ணியம் செய்தோனே! என்குலம் இன்றுமுதல் ஈடேறி விட்டது' என்றெல்லாம் உபசாரம் கூறி வணங்கி அவர்களே அழைத்துக்கொண்டு வந்து அவர்கள் இருப்பதற்கு ஏற்ற தூய் மையான இருக்கையில் எழுந்தருளச்செய்து, 'என் குடிசை இன்று முதல் புனிதமாயிற்று' என்று புகழ்ந்து வணங்கி அவர்களுக்கு வேண்டுவனவற்றை மனமகிழ்ந்து அளித்தல் வேண்டும். அவர்கள் எழுந்து போகும்போது பதினறு அடிக்குக் குறையா மல் தொடர்ந்து சென்று வழியனுப்புதல் வேண்டும். ஆகிய இவைகள் ஒருவன் முத்தி அடைதற்குரிய ஏதுக்களாம்.

ஈவானும் ஏற்பானும் :

கொடுக்கிறவன் அருளோடும் அன்போடும் கொடுப்பானு யின், அவன் கையில் வாங்குகிறவனும் அவனேடு சிவலோகம் சென்று சேர்வன். அருளின்றி அன்பின்றிக் கொடுக்கின்றவன் கையில் வாங்குகிறவன், அவனேடு நரகத்தில் இருந்து வருந்துவன்.

காசி, குருக்ஷேத்திரம், பிரயாகை, புஷ்கரங்கள், கடல், கங்கை, நைமிசாரண்யம், ஸ்ரீபருப்பதம், வேதபருவதம், கோகரணம், சங்கரன்கோயில், அம்பாசமுத்திரம், திருவெண்ணெய்நல்லூர், பெண்ணுகடம், ஒற்றியூர், ஒத்தூர், திருவூறல், திருவான்மியூர், திருப்பாசூர், திருவிரிஞ்சை, காரிமலே, திருகாளத்தி காஞ்சிபுரம், திருமுதுகுன்றம் என்கின்ற விருத்தாசலம், திரு

வண்ணாமலை, கும்பகோணம், திருவிடைமருதூர், திருவாரூர், திருப்புலியூர், சீகாழி, திருவையாறு, கண்டியூர், திருவீழிமிழலை, வேதாரண்யம், விற்குடி, திருவலஞ்சுழி, திருவாஞ்சியம், திருவெண்காடு, திருச்சாய்க்காடு, திருப்பரங்குன்றம், இராமேச்சுரம், மதுரை, திருப்பூவணம், திருநெல்வேலி, திருவஞ்சைக் களம், திருப்புக்கொளியூர், கொல்லிமலை முதலான புண்ணியத் தலங்களும், நதிகளும், முனிவர்கள் வாழுகின்ற மடங்களும், கோசாலைகளும் ஆகிய இடங்களில் தானஞ்செய்ய விரும்பு கின்றவர்கள் மிகச் சிறந்தப் பயனை அடைவார்கள்.

இங்ஙனமே உத்தராயணம், தட்சிணாயனம், தைமாதப்பிறப்பு, ஆடிமாதப்பிறப்பு, சித்திரைவிஷு, ஐப்பசிவிஷு, அமாவாசை, பருவம், திருவாதிரை, விதிபாதயோகம் முதலான சிறந்த புண்ணிய காலங்களில் தவம் செய்தோரும் மேலான பதவிகளை அடைவார்கள்.

தானஞ்செய்வதில் உள்ள மனவிருப்பம், பேரன்பு, மேலான மகிழ்ச்சி என்றும் பாராட்டப்பெறும். காசி முதலான புண்ணிய க்ஷேத்திரங்களில் கிரஹணம் முதலான புண்ணிய காலங்களில் மகிழ்ச்சியோடும்சிவசிந்தையோடும்முனிவர்முதலியதக்கோர்க்குத் தானங்கள் செய்தால் அதன்பலன் ஆகாயம்போலப் பரவி நிற்கும், அழியாமல் இருக்கும். இவ்வாறு முருகப்பெருமான் முனிவர்க்கு தானபலத்தின் சிறப்பை அறிவித்தார்.

## சிவதருமங்கள் :

'அகத்திய முனிவனே! அருகில்வா, சிவதருமம் என்பது தீராத வியாதியால் வருந்துவோனையும் தேவசரீரத்தோடு விளங்கச் செய்வது. அறிவில்லாதவரை ஞானிகளாக்குவது, சிவலோகத்தில் சேர்ப்பிப்பது. அத்தகைய சிவதருமங்களைச் சிவ பெருமானே அருளிச்செய்தார். அதனை நீ கேட்பாயாக 'என்று முருகப்பெருமான் அகத்தியருக்கு மொழியலுற்றார்.

சிவதருமம் எல்லாத் தருமங்களுக்கும் மேலானது. செய்தவனை என்றும் நீங்காமல் பற்றி நிற்பது. சிவன் அருளினாலே பலவகைப் பயன்களை அருளுவது. வேண்டியவற்கு வேண்டிய பயனைக் கொடுப்பது, எண்ணிறந்த காலம் அழகு பெறப் பயன் தருவது. அத்தகைய தருமங்கள் பத்தாம். 1. கொல்லாமை, 2. பெருமை, 3. வாய்மை, 4. நாணம், 5. பழிக்கு அஞ்சுதல், 6. பாவத்திற்கு அஞ்சுதல், புண்ணியங் களைச் செய்ய விரும்புதல், 7. மன அடக்கம், பொறி அடக்கம்,

கொடை முதலியன, 8. உடலை வெறுத்துத் தவம்செய்தல். 9. சதாசிவம் முதலான திருமேனிகளைத் தியானித்தல், 10. சிவ பூசை செய்தல் முதலியனவாம். இத்தருமங்களை வழுவாது ஒழுகுவோர் சிவபோகத்தை நுகர்ந்து சிவானந்தத்தில் அழுந்தி இருப்பார்கள். அவர்களுக்கு எந்நாளும் இன்பமேயன்றித் துன்பமில்லை.

சிவபெருமானை மனமுருகித் தியானித்துச்செய்யும் சிவபூசையின் பயனைக் கேட்பாயாக. மனிதன் உடல் தூய்மை, ஆடைத் தூய்மை, இவையின்றி வினை அழுக்கை உடையவர்களும் சிவபெருமானை ஒருநாள் பூசிப்பாராயின் பேயாய் அழுகின மாமிசங்களைப் புசித்து மனமகிழ்ச்சியோடு பைசாச புவனத்து இருப்பார்கள்.

வெகுளி நிறைந்த மனத்தோடும், சிவந்த கண்களோடும், நல்வினைகளைச் செய்யாது தீவினைகளையே செய்பவர்கள் இரண்டு நாள் சிவபெருமானைப் பூசித்தால் சிவபெருமான் எழுந்தருளி, இராக்கத புவனத்தில் இருக்கும்படி அருள்செய்வான்.

ஊன் உண்பவர்கள், சிவபெருமான் திருவடிகளை மூன்று நாள் பூசித்து மாங்கனி முதலியவற்றை நிவேதிப்பாராயின் இறைவன் அவர்களை இயக்கர் புவனத்து வாழச்செய்வன்.

இசையும் கூத்தும் அறியாதவர்களும் நான்குநாள் பூசை செய்து சிவசந்நிதியிலே உளங்கனியப் பாடியும், ஆடியும் பரவுவார்களாயின் அவர்களை கந்தருவபுவனத்துக்கனுப்பி களிப்போடு வாழச்செய்வான் இறைவன்.

பிறர் மெச்சுவதற்காகச் சிவபூசை செய்தவர்களை இறைவன் இந்திரபோகத்து இருத்துவான்.

பெண்போகத்து விருப்பம் உடையவர்களும் ஆறு நாள் அன்போடு பூசை செய்வார்களாயின் சௌமிய புவனத்தில் சென்று பல பெண்களைக்கூடி இன்புறச் செய்வன் இறைவன்.

பலவிதமான போகங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையோடு நின்மலசிவத்தை ஏழுநாள் தொடர்ந்து பூசை செய்வாராயின் பிரம்மலோகத்தை அடைந்து நல்ல போகங்களை நுகர்வார்கள்.

வேத காயத்ரி மந்திரத்தோடு பூக்களைக் கொண்டு சிவனை எட்டு நாள் பூசித்த பேர்கள் பிராமிய புவனத்தை அடைந்து இன்புறுவார்கள்.

இறைவன் ஒருவனே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவராகவும் இருக்கிறார் என்று உணர்ந்து சமபுத்தி பண்ணி உள்ளன்போடு ஒன்பது (9) நாள் சிவபூசை செய்தவர்கள் வைகுண்டத்தை அடைந்து இன்பத்தோடு வாழ்வார்கள்.

யான் இதுவரை கூறியவைகள் அனைத்தும் ஏதாவது ஒரு குற்றமுடையோராய் சிவபூசை செய்தவர்கள் அடையும் நன்மைகள் பற்றியேயாம். இனி, குற்றமறப் பூசை செய்தவர்கள் அடையும் பயனைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக.

(வளரும்).

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம், குத்தாலம்.

சென்னை 56. திருமுறை இசை வழிபாட்டுத் திருக்கூட்டம். குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வரர் கோயிலுக்கு வழிபட வந்தோம் திருக்கோயில் சுத்தமாக இருப்பதுடன் தரிசனம் செய்பவர்கட்கு வசதியும் செய்து தரப்பட்டது. பெரும்பாலான கோவில்களில் சேவார்த்திகளுக்குத் தரிசனம் செய்ய வசதிசெய்து தரப்படாதது வருந்தவேண்டிய விஷயம். அவ்வாறில்லாமல் இந்த ஆலயத்தில் தரிசனத்திற்கு நல்ல வசதி செய்துள்ளார்கள். நன்றி வணக்கம்.

அன்புள்ள,

11—2—73. (ஒ-ம்) N. ஜகபதி,

தூத்துக்குடி தெய்வீகப் பேரவையிலிருந்து வந்த எங்களை (சுமார் 60 பேர்) முகமலர்ச்சியுடன் வரவேற்று கோவில் வரலாறு கூறி எங்களை ஒருமனப்படுத்தி கூட்டு வழிபாடு செய்வித்தனர். தவத்திரு சந்நிதானம் அவர்களின் ஆசியும் வழிபடுவதற்கு ஊக்குவிக்கும்முறையும், தமிழ்த்தொண்டும், நிர்வாகமும்போற்றத் தக்கது. வாழ்கசைவம், வளர்க திருப்பணி.

(ஒ-ம்) ர. மீனம்பாள்
தூத்துக்குடி தெய்வீகப்பேரவை
தூத்துக்குடி 2.

# தியானம் செய்வதால் உடல், மன அபிவிருத்தி

## சோதனைச்சாலை ஆராய்ச்சிகள் மூலம் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

இந்திய தியானமுறைகளைப் பயில்கிறவர்கள் உடல், மன அமைதியும் ஆரோக்கியமும் வளரப்பெற்று, நவீன கால வாழ்க்கையின் கெடுபிடிகளைச் சமாளித்துக்கொள்ளுந்திறன் பெறுகிறார்கள். போதைப் பொருள், மதுபானம் முதலான தீயபழக்கங்களிலிருந்து விடுபடுவதற்கும் தியானமுறை உதவுகிறது.

அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி நாடுகளில் கடந்த சில ஆண்டுகளாக இந்திய தியானமுறைகளை - மிக விரிவான ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் நடத்தியிருப்பதன் மூலமாக இந்த உண்மைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

தியான முறை ஆராய்ச்சிகளில் நிருபணமாகியுள்ள விவரங்களைப்பற்றி லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் ஒரு தகவல் கட்டுரை பிரசுரமாகியிருக்கிறது.

### நரம்பு மண்டலம் :

மனித உடலில் மத்திய நரம்பு மண்டலம், தானியங்கி நரம்பு மண்டலம் என்ற இரு முக்கிய அமைப்புக்கள் உள்ளன. இதயத்தின் இயக்கம், ஜீரணம், கழிவுப் பொருட்களின் வெளியேற்றம் முதலான உயிருக்கு ஆதாரமான செயல்கள் தானியங்கி நரம்பு மண்டலத்தால் நடத்தப்படுகின்றன. கைகால்கள் முதலான வெளி உறுப்புக்களின் இயக்கம், புலன் உணர்வு போன்றவை மத்திய நரம்பு மண்டலம் மூலமாக நடைபெறுகின்றன.

தியானப் பயிற்சி மத்திய நரம்பு மண்டலத்தில் பெரும் மாறுதல்களை உண்டாக்குகிறது. மனமும் உடலும் முன்னைவிட அதிகத் திறமையுடன் இயங்கத் துணைசெய்கிறது. அன்றாட வாழ்வில் நேரிடும் பலவித ஏமாற்றம், கோப தாபங்களின் அதிர்ச்சிகள் மனிதனை அதிகம் பாதிக்காமல் நரம்பு மண்டலத்தை நிதானப்படுத்தி வைக்கிறது. வாழ்வின் நெருக்கடிகளை எதிர்கொள்ள, புத்துணர்ச்சியும் உற்சாகமும் உள்ளவனாக மனிதனை மாற்றுகிறது என "டைம்ஸ்" கட்டுரை தெரிவிக்கிறது.

## மூளையின் மின்சார ஓட்டம் :

லண்டனிலுள்ள மாண்ட்ஸ்லி ஆஸ்பத்திரியில் தியானம் பற்றி சமீபகாலத்தில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. சில நபர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்கு ஒரு வருடகாலம் தியானப்பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களது மூளையின் மின்சார ஓட்டங்கள் கருவிகளைக்கொண்டு ஆராயப்பட்டன. அந்த நபர்களது மூளையின் மின்சார ஓட்டங்கள் தியானம் பயிலப்பயில மாறுதல் அடைந்துவருவதை டாக்டர்கள் கண்டனர்.

மனிதனின் சாதாரண வாழ்வில் உறக்கம், விழிப்பு, உணர்ச்சிக் கொந்தளிப்பு போன்ற நிலைகளில் மின்சார ஓட்டங்கள் சில வகைகளில் அமைகின்றன என்பது பல ஆண்டுகளாகத் தெரிந்திருப்பதுதான். தியானத்தில் இருப்பவரின் மூளை மின் ஓட்டங்கள் ஒரு தனி வகையாக இருக்கின்றன. உறக்கத்தில் இருப்பது போன்ற மின் ஓட்டங்களும், விழிப்பு நிலையில் இருப்பது போன்ற ஓட்டங்களும் ஒரே நேரத்தில் இணைந்து காணப்படுகின்றன என்பதை விஞ்ஞானிகள் அறிந்தனர். ஹிப்னடிச (மனோவசிய உறக்கம்) நிலை, அல்லது வேறெந்த அசாதாரண மனநிலையிலும் உள்ளதுபோன்ற மூளை மின்னோட்டம் தியான நிலையில் இருக்கவில்லை.

தியான நிலையில் இருப்பவரது உடலில் பிராண வாயுச் செலவும், இதயத்துடிப்பும் குறைகின்றன. உறக்க நிலையில் இருப்பதைக்காட்டிலும் குறைந்து விடுகின்றன என்பதை 1970ல் பெனசன், வாலஸ் என்ற விஞ்ஞானிகள் ஆராய்ச்சி மூலமாகக் கண்டு வெளியிட்டனர். தானியங்கி நரம்பு மண்டலத்தின் இயக்கமும் வழக்கத்தைவிட மிக நிதானமடைந்துவிடுகிறது என்பதையும், இரத்தத்தில் 'லாக்டிக் அமில'த்தின் விகிதம் மிகக் குறைகிறது என்பதையும் கண்டனர். தானியங்கி நரம்பு மண்டலத்தில் பரபரப்பும் இரத்தத்தில் 'லாக்டிக்' அமிலமும் அதிகமாக இருக்கும்போது மனிதன் கவலை, வெறுப்புபோன்ற உணர்ச்சிகளில் மூழ்கியவனாக இருக்கிறான் என்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ள விஷயம்.

## அபினி பழக்கம் ஒழிந்தது :

மனிதனின் மனப்பான்மையிலும் நடத்தையிலும்கூட தியானம் மாறுதல்களை உண்டுபண்ணுகிறது. 1862 நபர்களைக் கேள்விகள் மூலமாக பென்சன், வாலஸ் இருவரும் ஆராய்ந்ததில், தியானம் பயிலத் தொடங்கியபின் போதை மருந்துகள், மதுபானம், புகையிலை முதலான லாகிரிப் பொருட்களை உபயோகிக்கும் வழக்கம் மிகவும் குறைந்திருக்கிறது என்பதைக் கண்டு

பிடித்தனர். அபினி உபயோகிப்பவர்களின் தியானப் பயிற்சி வியப்பளிக்கும் வகையில் அந்தப் பழக்கத்தைக் குறைத்திருக்கிறது. வேறெந்த சிகிச்சை மூலமாகவும் அபினிப் பழக்கத்தை இவ்வளவு குறைக்க முடிந்ததில்லை.

அமெரிக்க ஸ்டான்ஃபோர்ட் ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் லியான் ஓட்டிஸ், 570 தியானப் பயிற்சியாளரை வைத்துக்கொண்டு பல சோதனைகளை நடத்திப் பார்த்தார். அந்த 570 பேரில் 49 பேர் அபினி உட்கொள்ளும் வழக்கமுள்ளவர்கள். 6 மாதம் தியானம் பயின்றபின் அவர்களில் 35 பேர் அபினிப் பழக்கத்தை அறவே விட்டுவிட்டனர்.

போதைப் பொருள் பழக்கத்தை முறிப்பதற்கும், வாழ்க்கை நெருக்கடிகளால் மனத் தளர்ச்சியடைவதால் ஏற்படும் பலவித நோய்களுக்கும் சிகிச்சையளிப்பதில் தியானம் என்பதும் ஒரு மருந்தாக உபயோகிக்கப்படுவது பல நாடுகளில் நடைமுறைக்கு வந்துவிட்டது என, பல விஞ்ஞானிகள் அளிக்கும் தகவல்களிலிருந்து உறுதிப்படுகிறது.

### தியானம் : அமெரிக்க அரசு அக்கறை

தியானத்தைப் பற்றி விஞ்ஞானிகளின் இந்தக் கண்டுபிடிப்புக்களை அறிந்து, அமெரிக்க ராணுவமும், சுகாதாரத் துறையினரும், இந்திய யோகி ஒருவர் (மஹரிஷி மகேச யோகி (போதிக்கிற "பர தியான முறை" என்பதைப் பற்றித் திட்டவட்டமான சில ஆராய்ச்சிகளை நடத்த நிதிகள் ஒதுக்கியுள்ளனர்.

இந்தக் குறிப்பிட்ட தியான முறையில் அவர்கள் அக்கறை காட்டுவதன் முக்கிய காரணம், "இரண்டரை நிமிட நேரத்தில்" அந்தத் தியான முறையை எளிதில் கற்பிக்கலாம் என்பதும், தினசரி காலையிலும் இரவிலும் 20 நிமிடம் தியானம் செய்து வருவது போதுமானது என்பதுமேயாகும்.

குரு சொல்லிக்கொடுக்கும் ஒரு மந்திரத்தை வாய்விட்டு ஜபித்தவாறு அந்த மந்திரத்தின் ஒலியில் கவனத்தைவைக்கிறார். தியானம் பழகுபவர் அவ்வாறு சிலநிமிடநேரம் செய்தபின் மனத்தின் சலனம் நின்று ஆழ்ந்த அமைதிநிலை உருவாகிறது. இது 'பர நிலை' என்று குறிக்கப்படுகிறது. இந்த அமைதி நிலையின்போதுதான் நரம்பு மண்டலத்தில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. தியானம் செய்பவரது மன ஆழத்தில் உள்ள உணர்ச்சிவேகங்களும் அமைதியடைந்து மனம் தெளிவுபெறுகிறது. இயல்பாகவே மகிழ்ச்சியான மனப்பான்மை உள்ளவராகி நிம்மதியடைகிறார். — தினமணி, 13—3—1973.

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 32. இதழ் 4. பக்கம் 187 இன் தொடர்ச்சி )

## 59. நரி பரியாக்கியது

அமைச்சர் தலைவராம் வாதவூரரை மாணிக்கவாசகராக்கி, தம் திருவடி சூட்டியாண்ட திறமுணர்ந்த நாம் இனி ஐயன் நரிகளைப் பரிகளாக்கி நடத்திய நாடகமும் காண்பாம்.

சுற்றமென்ற பாசத்தொடர்பெல்லாம் நீங்கியிருந்த அடிகளை மற்றைநாள் மன்னன் வரவழைத்து 'என்ன, இன்னும் பரிகளொன்றும் வரவில்லையே' என்றுகேட்க-வாதவூரர் 'இன்றுமுதல் மூன்றுநாளெல்லைக்குள் அவைவரும்' என்று பதிலிறுத்தார். அதோடு 'அந்தக் குதிரைகள் வந்தால் தங்க இடமும் வசதியும் போதா. அதனல் புதிய கொட்டகைகள் அமைத்து, அகன்ற வாவிகளை அகழ்ந்து; நகரையும் அலங்கரித்திடவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். அரசனுணைப்படி நகரத்தவர் இவைகளை நிறைவேற்றினர்.

அமைச்சர் கூறிய மூன்று நாட்களும் சென்றன. வாராத குதிரைகளுக்காக வாதவூரரைத் தண்டிக்கத் தொடங்கினன் வழுதி. இக்கள்வனைத் தக்கபடி ஒறுத்து என்பொருளை இவனிடமிருந்து முற்ற வாங்குங்கள் என்ற அரசனுணையை ஏவலர் நிறைவேற்றத் தொடங்கினர். பாரத்தை அவர்மேலேற்றியும் கிட்டிகட்டியும் அவரை வதைக்கத் தொடங்கினர். இறைவன் மேல் பாரத்தை ஏற்றிவிட்டு வருந்தாதுநின்ருர் அடிகள், இனியும் இவர்கள்செய்யும் கொடுமையைப் பார்க்கவியலாதென்று கதிரவன் கடல்புகுந்தான்.

அடிகளுக்கருள இறைவனே தோன்றியதுபோலச் செக்கர் வானம் தோன்றியது. நிலாப்பிறை அவன் மார்பின் ஏனக் கோடு போல், உடுக்கள் தலைமாலைபோல் காட்சி தந்தன.

பாண்டியவேந்தன், அடிகளை வதைசெய்யவே அதனால் ஏற்ற பழிபோல எங்கும் இருள்பரந்தது. அடிகளை ஏவலர் சிறையி லிட்டுப் பூட்டினர்.

## பொழுது புலர்ந்தது, புரவியும் வந்தது :

ஆனந்தமே வடிவமான பெருமான் இன்று மணிவாசகருக் காக நாதமென்ற முரசொலிக்க, நரிகளாகிய பரிகள் சூழ்ந்துவர, வேதமென்றபரிமேல்அழகனகவரும் கோலம்தரிசிக்கப்பகலவனும் விரைந்து வந்தான். அடிகள் சிறையிலிருந்தபடியே உண்ணு மல் உறங்காமல் இறைவனைத் தியானித்துக்கொண்டிருந்தார்.

'எங்கெங்கும் கண்களையும் காதுகளையும் கொண்டிருக்கும் நீ, எளியேன் துன்பத்தையும் புலம்பல்களையும் கண்டு, கேட்க இயலாதவனே! உன்னடிமையான நான் இவர்கள் கைப்பட்டு வருந்துவது உனக்கழகோ, ஊரார் உன்னருளை எப்படி நம்பு வார்' என்றெல்லாம் பலவாறு கூறிப் புலம்புகிருர்.

மண்ணுய்ப் புனலாய்க் கனலாய் வளியாகி
விண்ணு யிருசுடரா யித்தனையும் வேருகிப்
பண்ணு யிசையாய்ப் பனுவலா யெங்கண்ணுங்
கண்ணுை யென்னுறுகண் காணுவா றென்கொலோ

## நந்தி நாயகன் குதிரைப் பந்தியுடன் வந்தான் :

இளங்குழவியின் அழுகையொலி, தாய் செவியில் புகுமாறு போல, தன் செவியில் பட்ட புலம்பலைத் தீர்க்க, ஐயன் நந்தி முதலாகிய கணங்களுடன் புறப்பட்டான். ஆவணிமூலமாகிய இன்று நீங்களெல்லாம் காட்டில்திரியும் நரிகளனைத்தையும் பரிகளாக்கிக் கொண்டு - சேவகர்களாய் வாருங்கள். நாமும் உங்கள் தலைவனுக வருவோமென்று திருவாய் மலர்ந்தான். குதிரைகள் கூட்டமாய் நகருக்குள் வரவே, ஆண்களும் பெண் களும் அவற்றைப் பார்த்து, பலபட வருணித்தனர். துரகங்கள் கிளப்பிய தூசி வான் வழியை மறைக்க, பரிதி தான் செல்லும் பாதை தெரியாது விழித்தான். வருகின்ற வேதநாயகனைக் கண்டு நங்கையர் நாணமும் தோற்று நற்கலையும் தோற்றனர். காமவெப்பத்தால் கருகிச் சோர்ந்தனர். குதிரைகளின் குளம்பொலியும் வீரர்களின் ஆர்ப்பொலியும் மதுரையை நெருங்கின:

### வேந்தன் சினந்தான் விளைந்தது வேதனை :

பரனருள் விளையாட்டால் பரிகள் வரச் சற்றே காலம் தாழ்த்தது. பாண்டியன் மீண்டும் பொறுமையில்லாமல் மணி வாசகரை ஆட்களைக் கொண்டு தண்டித்தான். திசையறியாமல் - செய்யும் செயல் புரியாமல் கலங்கினர் அடிகள். ஓரே சிந்தனை தான் அவருக்கு. "என்நெஞ்சும்உரையும்செயலும்உனதென்றது- வஞ்சம் போலும். இப்போது அஞ்சேல் என்று நீ இரங்காதது அழகிதே. பாவியேனைப் பொருளாகக் கொண்டு பணிகொண்ட போதே என்னுயிரும் உடலும் உடைமையும் உனதென்று கொண்டாய். இன்றோர் இடையூறு எனக்குண்டானல்-உனக்குப் பழியே வரும்" என்று பன்னிப்பன்னிப் பரமனைப் பாடினர். அந்த வேளையில் கன்றிற்குத் தாயின்குரல் மகிழ்வூட்டுமாப் போலே குதிரைகளின் குளம்பொலியும் கனைப்பொலியும் வெகு அருகில் கேட்டது. வழுதி மகிழ்ச்சி மிக்கவனுகி மணிவாசகரை அழைத்து அன்போடு உபசரித்து அளவளாவி நும்போல் கருமம் முடிப்போர் யாரென்று உபசாரங்கூறி பரிகள் வருங் காட்சி காண விரைந்தான்.

### பரிகளைக் கயிறு மாறுதல் :

பல்லாயிரம் பரிகளோடு வந்த வீரர்களை 'நோக்கி உங்கள் தலைவன் யார் என்று வேந்தன் கேட்டான். சுட்டுதற்கரிய சோதி யாம் சிவபெருமானை இவன் என்று அவர்கள் காட்டத் தன்னை மறந்த நிலையில் ஏதோவொன்று தூண்ட எழுந்து நின்றான் மன்னன், பின் தானே தன் செய்கை கண்டு நாணினன். வீரர் களின் தலைவனும் விமலன் மன்னனை விளித்து, 'உன் பொருள் களைக் கொண்டுவந்து நமக்கும் நமக்கு வேண்டியவர்களுக்கும் ஆசைதீர வழங்கினர் உன் அமைச்சர்; ஆதலால் அவர்பொருட்டு விலைவரம்பில்லா நல்ல வாசிகளை இதோ கொண்டு வந்துள்ளோம்' என்று அடிகளின் பெருமையை எடுத்து விளம்பினர். அதோடு பரிகளின் இலக்கணம் அவைகளின் நடைகள் - தன்மைகள் இவைகளையும் கூறினர். குதிரை வியாபார நுணுக்கம் ஒவ்வொன்றையும் அங்கே அவர் சுட்டிச் சொன்னர்.

அரசனே 'இங்குள்ள இத்தனை குதிரைகளும் அழகு, வலிமை இவற்றல் மிக்கனவே, இதனை நீயும் உணர்வாய். இவைகளைக் கொள்ளுமுகத்தான் இன்று நீ கயிறு மாறிக் கொண்டு விட்டால் நாளை அவைகள் என்னவாலுைம் உனக்கும் எனக்கும் வழக்கில்லை' என்று நயமாக உண்மையைக் கூறினன்

ஐயன். அரசனும் அதற்கிசைந்தான். அதன்பின் குதிரைகளை அணிவகுத்து நடத்திக்காட்டி, அரசனின் நன்மதிப்பையும் பரிசையும் பெற்ருர். பாணபத்திரனுக்கு அடிமையான பரம் பொருள் குதிரைவிட்டுக் கீழிறங்கிவந்து அரசன்தந்த துகிலை இரண்டாம் கங்கை போல் தலையிலணிந்து கொண்டான்.

கயிறு மாறினபின் காவலர்கள் மிக உற்சாகத்தோடு புரவி களைக் கொட்டிலில் அடைத்தனர். ஓட்டி வந்த கணநாதர்கள் தம் தலைவருடன் மறைந்தனர். மன்னனும் கவலை யொழிந்தான். தம் விளையாட்டை அம்மையிடம் கூறி மகிழ்ந்தான் ஈசன்.

## 60. பரி நரியாக்கியது.

ஞான நாயகனுணையால் நரிகளெல்லாம் பரிகளாகியது. இப்போது பரிகள் தங்கள் முன்னுருவம் பெற்ற வகையையும், வைகையில் வெள்ளம் வந்த வரலாற்றையுங் கண்டு மகிழ்வோம்.

வேந்தன் தனது மகிழ்ச்சியை வாதவூரடிகளுக்குப் பொன் னும் மணியுந் தந்து வெளிப்படுத்தினுன். தன்னையடுத்த சுற்ற மும் நட்பும் மகிழ வார்த்தையாடி, பின்மாணிக்கவாசகர் தனியிடத் திலிருந்து அன்று பெருந்துறையில் ஆட்கொண்டவண்ணமும், இன்று பரிகள் கொண்டுவந்தருளியவண்ணமும் நினைந்து பெரிதும் மனநிறைவு கொண்டார். இனி என்றும் நீங்காப் பரமானந்தமடையும்படித் தம்மைத் தவநெறியில் செலுத்த வேண்டு மென்று உள்ளுருகித் துதித்து நின்ருர்.

நாளை இறைவன் மதுரைமண் சுமக்கப்போகிருன். அதனைக் காண இன்று பரிகளால் நம்மேல் பரவிய தூசினைக் கழுவிக் கொண்டு வருவோமென்று சூரியன் மேலைக் கடலில் குளித்தான். நிலவு தன்னொளியால் உலகைத் துடைப்போமென்று வெளியில் வந்தது.

அந்த இரவில் மீனவனின் அரண்மனை புகுந்து பரிகளா யிருந்த நரிகள் அத்தனையும் பிள்ளை மதிமுடிப் பெருமானின் விளையாட்டால் தம் சுயவடிவம் பெற்றன. 'நம்மை இக்கொட் டிலில் கொண்டுவந்தடைத்த மனிதர்கள் நாணவும் மாளவும் இங்குள்ள குதிரைகளைக் கடித்துக் குருதி குடித்துக் காட்டுக்கே ஓடுவோம். பிணப்பறையொலியும் அழுகையொலியும் கேட்கு மாறு செய்வோம். அதோடு இன்றைய பகற்போதில் மனிதர் களைச் சுமந்தும் அவர் சொற்படி கேட்டும் நடந்தும் நாம் இளைத் தோம். காட்டிலிருந்த நம்மைப் பிடித்துக் கட்டி தழும்புபட

அடித்த அவர்களை நாமும் துன்புறுத்துவோம்' என்று கூறிக் கொண்டு கட்டவிழ்த்துக்கொண்டு ஓடத்தலைப்பட்டன. கொள்ளையும் கடலையையும் வெறுத்து காட்டிலிருக்கும் ஊனை விரும்பியோடிய நரிகளைக் கண்டு நகர மக்கள் பதைபதைத்தனர். ஓடும் போது புறவு, பூவை, கிள்ளை, சேவல்களைப் பிடித்து விழுங்கின. தொட்டிலில் உறங்கும் பிள்ளைகளைத் தூக்கிப்போய் நக்கிப்பார்த்தன. இப்படியான அந்த இரவு மெல்லக் கரையக் கதிரவன் தோன்றினன். ஈறில்லாத சிவபரஞ்சுடரென்னும் இரவிவந்த போது தேறுவாரிடைத் தோன்றிய சிறுதெய்வங்கள் ஒளியிழப்பதைப்போல உடுக்கணங்கள் ஒளியிழந்தன. அண்டர்நாயகன் இன்று தொண்டர் ஒருவருக்காக மண்சுமந்து களைப்பான். அவன் திருவடிகளை வருத்தம்தீர வருடவேண்டுமென்று ஆயிரம் கைகளோடு செங்கதிர்ச் செல்வன் வந்தான்.

## வையையும் சுட்டது வசையும் சுட்டது :

குதிரைப் பந்தியாளர்கள் கடிதுவந்து அரசனிடம் 'அரசரேறே! நேற்றுவந்தபரிகள் இங்கிருந்த பரிகளுக்கு நமனாயின. அவைகள் நரிகளாகி எல்லாக் கொடுமைகளையும் செய்துவிட்டுக் காட்டிலோடி மறைந்தன' என்று நடுங்கும் குரலில் தெரிவித்தார்கள். அமுதமுண்டவன் நஞ்சுண்டதுபோல் நடுங்கி அருகிருந்த தலைவரைப்பார்த்து வேந்தன் 'அந்த வாதவூராளியென்ற கருக்கிருட்டுமனக் கள்வன் செய்த வஞ்சக வேலையிது. காட்டுவாழ் நரிகளைத் தந்திரத்தால் பிடித்து மந்திரத்தால் பரிகளாக்கி நம்மை மொற்றியுள்ளான். அவனுக்கு மிகக்கொடியதண்டனையை அளிக்கவேண்டும்' என்று கொதிப்போடு குமுறும் வேளையில் நேற்றையதினம் தம்பொருட்டுப் பரிகளைக் கொண்டுவந்து அரசனின் மனத்தை மகிழ்வித்த பரம்பொருளின் கருணையை மனத்தில் நினைந்து உற்சாகமாக வாதவூரர் அவை புகுந்தார்.

வந்தவரைச் சினந்துபார்த்து 'என்பொருள்களைக்கொண்டு போய் நீர் வாங்கிவந்த குதிரைகள் மிக அழகாய் இருக்கின்றன. உம்மைப்போல் கருமம் முடிப்போர் உலகில் யாருண்டு' என்று பரிகசித்தான் மாறன். மணிவாசகரோ ஒன்றும் புரியாமல் 'என்ன பிழை நேர்ந்தது?' என்று மிகப் பணிவுடன் கேட்டார்.

அரசன் காவலர்கள் கூறியதை எடுத்துக்கூறி 'நீர் கண்ணும் இடுகவசமும் போல் காரியம் செய்ததெல்லாம் என் பொருளைக் கவர இட்ட நாடகமே. இனி உம்மை உணர்ந்து கொண்டேன். உம்மால் உம் குலப்பெருமையும் பாழாயிற்று' என்று கடிய வார்த்தைகள் கூறி காவலர்களைக் கூப்பிட்டு 'இவனை வைகையின் சுடு

மணலில் கதிரவனைப் பார்க்க நிறுத்தி நெற்றியிலும், கரத்திலும் சுடுமண்ணேற்றி சாட்டை கொண்டு அடியுங்கள்' என்று ஆணையிட ஏவலர்கள் அரசனுணையை அவ்வண்ணமே நிறைவேற்றினர்கள்.

வாதவூரர் துடிதுடித்தார், 'நாடகக் கூத்தனே! என் பொருட்டும் ஓர் நாடக மல்லவோ நடத்திவிட்டாய். என்னை அடிமை கொண்டதும் பொய்யோ' என்றெல்லாம் பலவாறு கதறினர். குரல் கேட்ட பெருமான் இவர் செயலை உலகம் வியக்கவும் முடிமேல் மண் சுமக்கவும், ஓர் முதியாள் தேரேறி விண்ணடையவும் நினைந்து ஒரு செயல் செய்தான். எதிர்பாரா வகையில் வைகையில் வெள்ளம் இருகரைகளையும் உடைத்துக்கொண்டு ஊரை அழிக்கத் தொடங்கியது. ஊரவர்கள் வெள்ளம் கண்டு நடுங்கினர்கள். செய்வதறியாது திகைத்தார்கள். வெள்ளம் பெருக என்ன காரணம்? நம் கோமான் செயல் பிழைத்ததோ, இறைவனது விளையாட்டோ எனப் பலப்பல பேசிப் பதைபதைத்தனர். வேப்பந்தார் வழுதிக்கு இதனைத் தெரிவிக்க ஆட்கள் அரண்மனை சென்றனர். வாதவூரரும் ஆலவாய்ப் பெருமான் முன்புசென்று அழுது தொழுது அகங்குழைந்து பாடிநின்ருர்.

(வளரும்)

## மாணக்கர் யார்?

பின் வாழ்வுக்கு வேண்டப்படும் மாண்பொருள்களை ஆக்குதற்கு ஒழுக்கநெறி நிற்போர் மாணக்கர் எனப்படுவார்.

## சமயத்தின் பயன்

சமயம் மக்களை விலங்கினின்றும் பிரிப்பது. சமயம் மக்கட்குக் கடவுள் உணர்வூட்டி அவர்களைக் கடவுள் நெறியில் நிறுத்துவது. சமயம் மக்கள் பாலுள்ள அழுக்காறு அவா வெகுளி முதலிய விலங்கு நீர்மைகளைச் செகுத்து அவ்விடத்தில் அன்பு, அருள். அறம் முதலிய கடவுள் நீர்மைகளைப் பெய்து அம்மக்கள் கடவுள் நிலையைப் பெறத் துணைபுரிவது.

திரு. வி. க. வின் இளமை விருந்திலிருந்து......

# பாம்பு கடிக்குப் பயப்பட வேண்டாம்

எந்தப்பாம்பாக இருந்தாலும், அது தீண்டிவிட்டால் பயப் படாதீர்கள்; நம்மிடம், நமக்கு அருகில் அருமையான மருந் திருக்கிறது. இந்த மருந்தை உங்கள் ஊரில் உள்ள அனைவருக்கும் சொல்லிவையுங்கள்.

பாம்பு கடித்து விட்டதா ? உடனே வாழை மரம் இருக்கும் இடத்திற்கு அரிவாளுடன் ஓடுங்கள்! அடியில் ஒருவெட்டு, நுனியில் ஒருவெட்டுப் போட்டுத் துண்டத்தை எடுத்து வாருங்கள். வாழைப்பட்டைகளை உரித்து மண்சட்டி அல்லது பீங்கான் கோப்பையில் சாறு பிழியுங்கள். சுமார் ½ படி சாறை நஞ்சுதீண்டப்பட்டவனுக்கு உள்ளுக்குக் கொடுங்கள். நல்ல பாம்பின் நஞ்சு முறிந்துபோய் ஆள் பிழைத்துக் கொள்ளுவான்.

உங்களுக்குச் செய்திவர நேரம் ஆகிவிட்டாலும், வாழை மரம் கொண்டுவர நேரமாகிவிட்டாலும் கடிபட்டவன் பல் கிட்டிவிடும். வாழைப்பட்டைச் சாற்றை இவன் குடிக்க முடியாது. ஆகவே, பற்றுக்குறடால் பல்லை விலக்கி மருந்தை விடச் செய்யாதீர்கள். இதைவிட அறியாமை வேறில்லை. பல்லை விலக்கினாலும் தொண்டையை விலக்க முடியாது.

பாம்பு கடிபட்டவன் பற்கள் கிட்டியிருந்தால் சில வாழைப் பட்டைகளை முதலில் உரித்துக் கீழே பாயாக விரித்து அதன் மேல் அவனைப்படுக்க வைத்து விடுங்கள். பிறகு சாறு பிழியவும் அவன் வாய் திறக்கவும் சரியாக இருக்கும். பிறகு சாறைக் குடித்து எழுந்து நடப்பான்.

இச்சாறு நல்லபாம்புக்கடிக்கு 10க்கு 10-ம் பிற பாம்புக்கடிக்கு 10க்கு 7-ம் குணப்படுத்தியிருக்கிறது.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதத்தின்
'தமிழ் மருந்து' என்ற நூலிலிருந்து....

# திருவாசகத்துள் இன்பியல்

## புலவர். திரு. மு. வைத்தியநாதன்

### முன்னுரை :

மக்களுயிர் அறிவன அறிந்து அன்பு நெறியில் இன்புற்று வாழச் சமயங்கள் வழிகாட்டுகின்றன. உலகத் தொன்மைச் சமயங்களுள் நம் சைவசமயம், தலைமையும் சிறப்பும் உடைய தாகும். இதன் ஆசிரியர்களுள் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தின்கண் காணப்படும் பகுதிகளை இன்பியற் செய்தி களோடு ஒப்பிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

### இறையொளி :

செந்தாமரை மலரானது செஞ்ஞாயிற்றின் இளங்கதிர் உதயவேளையில் தீண்டுகின்றபோது செந்தேனைப் பிலிற்றுவது போல, அடியார்களின் இதயத் தாமரையில் இறையொளி படு கின்றபோது அருட்பாடல்கள் பிறக்கின்றன. உண்மையில் இறையொளி அவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டும். அடியார்கள் உள்ளம் இறைவனைப் பற்றி நிற்க வேண்டும். இவையிரண்டும் கலந்து நிகழும்போது தான் அருட்கவிதையாகிய இன்பத்தேன் சுரக்கின்றது.

### அருட்பாடல்கள் :

மெய்யுணர்ந்த அடியார்களின் உள்ளத்தூறும் அருட் பாடல்கள், பயில்பவர்களை இன்பக் கடலுள் மூழ்கச் செய்யும்; அன்பைத் தெப்பமாக்கித் துன்பமெனும் கடலைக் கடக்க உதவும்; இறைவனுக்கும், நமக்குமுள்ள இடைவெளியைக் குறைத்து, அவனை அனைவருள்ளத்தும் ஒங்காரமாக உறையச் செய்யும்; நம்முள்ளத்தை அன்பு நிலைக்களனாக - ஆண்டவன் உறையும் கோயிலாக - அருள்சுரக்கும் சுனையாக மாற்றியமைக்கும். இத் தகைய பாடல்களுக்கு அழிவே இல்லை. பசிக்கு உணவும், பிணிக்கு மருந்தும்போலத் தேவைக்கு ஏற்ப எழுந்து, அது முடிந்தவுடன் இருந்த சுவடும் தெரியாமல் மறையும் பாடல் களல்ல, அருட்பாடல்கள். அவை அறிவு, அன்பு, அருள்தந்து

ஆயிரமாயிரம் ஆண்டுகள் அழியாத்தன்மைபெற்று வாழ்வன வாகும்.

### அடியார்கள் ;

அருளாளர்களாகிய அடியார்கள் சாதி மொழி பாகுபாடு கட்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் காண்பன எல்லாம் அறிவும், அன்பும், அருளும், அருளாற்பெறும் இன்பமுமே. அன்பையே கடவுளாகக் கொண்ட நம் சைவ சமயம், அந்த அன்பே உருவாய் விளங்குவது. அருளாளராகிய மணிவாசகப் பெருமான் அருளியது திருவாசகம்.

### திருவாசகம் ;

இது நையாத மனத்தினையும் நைவிக்கும். இறைவனே ஞான குருவாக வந்து, உண்மை ஞானத்தை உதவி, ஆட் கொண்டதன்பின் ஞானசிடனுக்குச் சிவம் எங்ஙனம் சுவானு பூதிகம் ஆகின்றது என்பதையும் இஃது இனிது விளக்குவ தாகும். சிவபுராணம் முதலாக அச்சோப் பதிகம் ஈறாக ஐம்பத் தொரு பதிகங்களையும் 656 பாடல்களையும் உடையது. வெண்பா முதலான பாக்களோடு பாவினங்கள் விரவத் தொடுக்கப் பட்டது.

### இன்பியல் :

இன்பியலாவது, ஒல்காப் பெருமைத் தொல்காப்பியம் முத லான பழந்தமிழ் இலக்கண நூல்கள் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை, என்னும் திணைகளாகவும், அவற்றின்கண் பல துறைகளாகவும் வகுக்கப்பட்ட அகம்பற்றிய செய்திகளே ஆகும். அகத்துறை இலக்கணங்கூறும் இயற்கைப் புணர்ச்சி, இடந் தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம் முதலான அத் துணை திணை துறையொழுக்கங்களும், திருவாசகத்தின்கண்ணே இல்லையென்றாலும் அதில் உள்ள பகுதிகள் அத்திணை துறை களோடு மிகவும் பொருந்திக் காணப்படுகின்றன. மேலும், ஒரு தலைவன் தலைவியினுடைய வாழ்வில், இலக்கணம் வகுக்கும் அத்துணை நிலைகளும் ஏற்படுவதில்லை. ஏற்பட வேண்டுமென்ற நியதியும் இல்லை. திருவாசகத்தைப் பலகால் பயின்று ஆய்ந்த அறிஞர் சிலர் அந்நூல் முழுவதும் அகப்பொருட்டுறைப்படி அமைந்தது என்பர். அவ்வமைப்பு, தலைவனுடன் ஊடிய தலைவியின் ஊடல் தணிய தலைவன் இயல்பைப் புகழ்ந்து கூறிய வாயில்கள், தலைவியால் மறுக்கப்பட்ட வகையில் உள்ளது

என்று வகை செய்திடுவர். இதனையெல்லாம் கருத்துட்கொண்டு நூல் முழுவதுமாகக் காணப்படும் செய்திகளை இன்பியல் வகையில் காண்போம்.

## 1. இயற்கைப் புணர்ச்சி :

இறைவனால் அழைக்கப்பெற்ற மணிவாசகப் பெருந்தகை திருப்பெருந்துறைக்கு வந்து, அங்கு இறைவனைக் குருந்த மர நிழலில் குருவடிவில் காண்கின்றார். அவ்வளவில் அவர் உயிரானது இறைவனின் தொன்மையினையும், புகழினையும் அறிகின்றது. அவன் அண்டங்களாகவும், அவ்வண்டங்களுள் அனைத்துமாகவும் இருப்பதை உணர்கின்றது. அவ்வளவில் உலக இயக்கத்திற்குக் காரணமாகிய அவனைப் போற்ற முற்படுகின்றது. அவ்வாறு போற்றுதற்கு மெய்யுணர்தல் முதலானவை நிமித்தங்களாக அமைகின்றன. மெய்யுணர்ந்த அவர் உயிர் ஆனந்தத்தில் மூழ்கித் தன் செயல் மறந்து அதீத நிலையடைந்து அவனுடன் தானே கலந்து மகிழ்கின்றது. தலைவன் தலைவிபாற் கொண்ட தனது அளவற்ற காதன்மை தோன்ற, இருப்பதை உவமித்து மகிழ்தலும், இல்லாதவற்றை ஒப்புக்கூறி உயர்த்தி மகிழ்தலும் செய்வன். இது இயற்கைப் புணர்ச்சிக் கண் வரும் காட்சி, ஐயம், தெளிவு என்பவைகளுள் ஐயம் என்னும் அகத்துறையாக நிகழும். நம் அடிகளார் இறைவனை ஓரிடத்து "ஆடகச்சீர் மணிக்குன்றே" என்கின்றார். இறைவனை ஒரு பொற்பூமியில் முளைத்திருக்கின்ற மாணிக்க மலையாகக் கூறி மகிழ்கின்றார். பொன்னும் ஒளியுள்ளது, மணியும் ஒளியுள்ளது. இரண்டும் இணையில் பேரொளி தரும். இது இல்லாததைக் கூறி மகிழ்ந்ததாகும்.

## 2. பிரிந்தவழிக் கலங்கல் :

இறைவனுடன் இரண்டறப் புணர்ந்து மகிழ்ந்த அவ்வுயிர் ஒரோருகால் உடல் துன்பங்களால் தாக்கப்பட்டு அவனைப் பிரிந்துவிடுகின்றது. "நின்னைப் பிரியேன், பிரியின் தரியேன்" என்றனையே, இப்பொழுது பிரிந்தது என் கருதி என்று கலங்குகின்றது. மாசு படிந்த மாணிக்கத்தை மண்ணிலிருந்து எடுத்து, மாசு நீக்கிப் பட்டை தீட்டிப் பதினாயிரம் விலை பெறக் கூடிய தாக்கியபின் அதனைக் கை நழுவ விடுவார் போல, என்னை விடுவையோ? என்று கேட்டு, விடுதி கண்டாய், விடுதி கண்டாய் என்று வேண்டி நிற்கின்றது.

3. களவு வெளிப்படல் :

பொதுவாகத் திருவருட்சக்தியை எண்ணி மகிழ்ந்த அவ்வுயிர் தன்னிலே அறிகின்றது. அப்போது சக்தியின் பதிவு உண்டாகித் தன் தன்மை கெட்டுச் சக்தியாகவே ஆகிவிடுகிறது. உலகியல் மகளிரைப்போல அம்மானை ஆடுகின்றது. சுண்ணம் இடிக்கின்றது; வண்டினைத் தூது அனுப்புகின்றது; பறைகொட்டி மகிழ்கின்றது. சாழல் ஆடுகின்றது; பூக்கொய்கின்றது; உந்தி பறக்கின்றது; தோள் நோக்கமாடுகின்றது. ஊசலாடுகின்றது. இவ்வாறெல்லாம் தன்னிலைகெட்டு ஆடியும் பாடியும் மகிழ்வதைப் பலர்காணும் நிலையதாகிக் களவு வெளிப்படுகின்றது.

4. அறத்தொடு நிற்றல் :

தன்னறிவு இழந்து ஆடியும் பாடியும் மகிழும் உயிராகிய தலைவியைச் செவிலி காணுகின்ருள். ஐயம் அடைகின்ருள். தலைவியின் தோழியை அழைத்து உற்றது யாது என்று உசாவுகின்ருள். தோழி, தலைவி பண்டொரு நாள் தலைவனைச் சோலையின்கண் கண்டு கலந்து மகிழ்ந்தாள்.

“ கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம் உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும் ”

என்று அறத்தொடு நிற்பாள். அப்பொழுது ஒரு கனிந்தநிலை ஏற்படும்.

5. விரைந்து தலையளி செய்ய வேண்டல் :

இளவேனிற் பருவம் வரவே, தலைவன் சிறைப்புறத் தானக இருக்க, அவன்பால் விரைந்து தலையளி செய்யக் குயில்மூலம் வேண்டும் நிலைவரும். குயில்சென்று உரைத்தும் தலைவன் வாளாவிருப்பதுகண்டு வருந்தித் தனித்திருப்பாள். அப்போது தன் தனிமை தவிர்க்கக் கிளியை அழைத்து அதனிடம் தலைவனுடைய ஊரும், பேரும், நாடும், நகரும், தேரும், குதிரையும், யானையும், தானையும் யாவைஎனக் கேட்பாள். அது கூறக்கேட்டு மகிழ்வாள்.

6. பண்டு நிகழ்ந்தது நினைந்து மகிழ்தல் :

தனித்திருக்கும் தலைவி, தான்விழித்திருப்பதாகவும், தலைவன் உறங்குவதாகவும் நினைத்து பள்ளி எழுந்தருள வேண்டுவாள்.

தலைவனுடன் தனக்குள்ள தொடர்பையும் அவனைத் தான் பண்டு கலந்த காலத்து இன்பமாக – அன்பாக – ஆனந்தமாக இருந்தமையையும் எண்ணி மகிழ்வாள்.

" சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச்சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் "

என்று கூறிக் களிப்பாள். இதனிடையே இரக்கந்தோன்ற, தலைவனுடன் தான் தலைப்பெய்த இன்பம், இன்று இல்லாமை உணர்ந்தும் யான் செத்திலனே என்பாள். அவனிடம் அடைக்கலம் கேட்பாள். முன்னர் ஆண்டு கொண்ட அருட்டிறம் நினைவிற்குவர, அதனைப்பாராட்டி அதிசயங்கண்டதாகக் கூறுவாள். அருளவேண்டுவாள்.

## 7. கற்பு மேம்பாடுரைத்தல் :

தலைவன் உண்மை உருக்காட்டி ஆட்கொள்வான். அந்த மகிழ்ச்சியால் ஆனந்தங்கண்டேன். இணையிலியைக் கண்டேன். சிவபதங்கண்டேன். என்று உள் மகிழ்ந்து அவனிடம் திருவடிப் பேறு கேட்டுக் குழைந்திடுவாள். தலைவனின் அன்பர்களையன்றிப் பிறரைக் காணாள். உன்னை அன்றி வேறு யாரையும் யான் அறியேன் என்று கற்புநிலை கூறுவாள்.

தலைவனுடன் கலந்து அவனைச் சிக்கெனப் பிடிப்பாள். அவன் தன்பொருட்டுச் செய்த அற்புதம் வியந்துரைப்பாள்.

## 8. உடன் போக்கு :

தலைவன் திருவடியை முடிமேல்வைத்துக்கொண்டு அடியேன் தலை விளக்கம் அடைந்தது என்பாள். தலைவன் அழைக்க அவனுடன் இரண்டற இருக்கும் அவள் தன் உடன் வருவாரை அழைத்துக்கொண்டு யாத்திரை புறப்படுவாள். தடையேற்படின் படையெழப்பணிப்பாள்.

## 9. கலந்த இன்பம் :

தலைவனுடன் தான் அனுபவிக்கும் அனுபவம் ஐயம் இல்லாதது என்று ஆனந்தமடையும் அவள் இத்தகைய இன்பத்தை இவ்வுலகில் என்னையன்றிப் பெறவல்லவர் வேறுயார்? அச்சோவே

என்றுரைப்பாள். இவ்வாறாக நூல் முழுவதும் தொகுத்துச் சிந்திக்கும்போது அகத்துறை இலக்கணம் கூறும் திணை. துறையொழுக்கங்கள் யாண்டும் மறை பொருளாக இருத்தலை யறியலாம்.

## தெய்வநூல் அனுபவம் :

திருவாசகம் பேரின்ப நிலையுணர்த்தும் தெய்வ நூல். மணிவாசகர் சிவபெருமானிடத்து முறுகிய அன்பு செலுத்தியவர். அவர் மகளிர் நிலையைப் பொருத்தி அருளிய அன்பு நெறிப் பாக்களைக் காமம் நுதலிய இன்ப நெறிப் பாக்களாகக்கொண்டு, அகத்துறையாகிய ஐந்திணைக்காமம், பெருந்திணைக்காமம் முதலியவாகக்கொண்டு சிந்தித்தல் அறிவிற்குப் பொருந்துமாயினும், அனுபவத்திற்குப் பொருந்தாது என்பதே ஆன்றோர்களின் கருத்தாகும்.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### தருமையாதீனம்

### ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.

காலனை மார்க்கண்டற்காக் காய்ந்து, ஞாலம் தன்புகழே மிக வாக்கிய மூர்த்தியையும்; விழிக்குத்துணையாம் அன்னை அபிராமியையும் வணங்கும் பேறு இன்று பெற்றேன். ஆலயப் பணியாளர் அனைவரும், அத்தனையும், அம்மையையும் கண்டுவணங்க அன்புடன் ஆவன செய்தனர். அருட்பணியிலும், அன்புப்பணியிலும் ஈடுபட்டிருக்கும் அவர்கட்கெல்லாம் என் நன்றியும் வணக்கமும் உரியன. உள்ளம் உருக, ஊனுருகப் பாடினார்கள் ஓதுவாமூர்த்தி. அவருக்கு என் பாராட்டுக்கள். இந்தத்திருக்கோயிலைக் கவினுறக் காத்து அருளாட்சி செய்துவரும் தருமையாதீனக் குருமணி 26ம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவடிகட்கு என் சிரம்தாழ்ந்த வணக்கம். தருமையாதீனத்தின் முத்திரை இத் திருக்கோயிலில் முழுதும் மிளிர்கின்றது.

(ஒ-ம்) ம. சு. முருகேசன்,
டிப்டிகமிஷ்னர் H R. & C.

1—4—73. மதுரை.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 31. இதழ் 2. பக்கம் 138 இன் தொடர்ச்சி)

योग्यावापि निषिद्धावा बहुदोषाकुलापिवा।
काले सुवासिनी प्राप्तां सर्वथा भक्तितोऽर्चयेत् ॥

— योगिनीतन्त्रे

யோக்யமுள்ளவளாகவிருந்தாலும், நிஷித்தையாகவிருந்தாலும் அநேகம் தோஷமுடையவளாகவிருந்தாலும் சமயத்தில் சுவாஸினியைப் பக்தியுடன் பூஜிக்கவேண்டும்.

— யோகிநீதந்திரம்.

தீபத்திலும் தேவியின் பூஜையைச் செய்யலாம். அதாவது நெய் தீபமேற்றி அதில் அத்தியாய தேவதையைப் பூஜித்து, ரத்த சாமுண்டீ மந்திரத்தினுல் பூஜித்து, தூபம் தீபம், பாயஸான்னம் நிவேதனம் செய்து ப்ராமண போஜனத்துடன் குமாரி வடு போஜனம் செய்விக்க வேண்டும்.

தனப்ராப்தியின் பொருட்டு வில்வத்தினுலும், வச்யத்தின் பொருட்டு அரளியினுலும், மோஹனத்தின் பொருட்டு செம்பரத்தையினுலும், புத்ரப்ராப்தியின் பொருட்டு துளசியினுலும், புஷ்டியின் பொருட்டு தாமரைப்பூவினுலும் பூஜிக்க வேண்டும்,

— சிதம்பர ரஹஸ்யம்.

अन्ते शतं ब्राह्मणांश्च सुवासिनीश्च भोजयेत ।

முடிவில் நூறு அந்தணர்களுக்கும் சுவாஸிநிகளுக்கும் போஜனம் அளிக்கவேண்டும். இவ்வாறு செய்யும் தேவிபூஜை தேவர்களுக்கும் கிடைக்காது. கலியுகத்தில் இஷ்டசித்தியை யளிக்கக்கூடியது.

— சிதம்பர ரஹஸ்யம்,

கேதாரவ்ரதம் :

कन्यायामर्कसंचारे मलमालादि वर्जयेत् ।
प्रातपचसिते काले विद्यते याचतुर्दशी ॥
तद्दिनेच व्रतं कुर्यात् केदारंचेति कीर्त्तितम् ।
— शैवकालविवेकम्

புரட்டாசி மாதத்தில் கிருஷ்ணபக்ஷசதுர்த்தசியில் அனுஷ்டிக்கவேண்டும். — சைவகாலவிவேகம்.

இந்த விரதம் புரட்டாசிமாத சுக்லபக்ஷ அஷ்டமி முதல் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி முடிய இருபத்தொரு நாளாயினும், கிருஷ்ணபக்ஷ பிரதமை முதல் பதினான்கு நாளாயினும், அஷ்டமி முதல் சதுர்த்தசி யீறாக ஏழு நாளாயினும், கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியான ஒருநாளாயினும் கேதாரநாதரைக் குறித்துச் செய்யப்படும் விரதம்.

21 இழையுள்ள காப்பை ஆடவர்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொண்டு முதலிருபது நாளும் ஒவ்வொருபொழுது போஜனம் செய்து இறுதி நாளாகிய சதுர்த்தசியில் விரதம் இருந்து பூஜை செய்து மறுநாள் காலையில் பாரணம் செய்யவேண்டும்.

ஸ்கந்தஷஷ்டி :

तुलामासे तु संप्राप्ते प्रथमायां तिथौ शुचौ ।
कर्तव्यं षण्मुखस्यास्य पूजा षष्ठ्यन्तमुत्तमम् ॥
— कामिकागमम्

துலாராசியில் சூரியன் வந்தபொழுது பூருவபக்ஷ ப்ரதமையில் ஷண்முகப் பெருமானுடைய விரதாதிகளை ஆரம்பித்து ஷஷ்டியந்தமாகச் செய்யவேண்டும். — காமிகாகமம்.

तुलामासे सितेपक्षे प्रथमायां व्रतं चरेत् ।
षष्ठ्यन्तं वृश्चिके मासे स्कन्दषष्ठि व्रतं भवेत् ॥

துலாமாத சுக்லபக்ஷ ப்ரதமையில் விரதத்தை ஆரம்பித்து விருச்சிக மாதத்தின் ஷஷ்டியில் முடிக்கலாம்.

இந்த வாக்கியங்களால், ஷஷ்டி விரதத்திற்கு சாந்திர மான மாதமே கொள்ளவேண்டும். அதிக மாத தோஷத்தி னல் ஒரு சமயம் விருச்சிக மாதத்திலும் விரதசமாப்தி ஏற் படும் என்பது ஆயிற்று

விரதத்திற்கு ஆரம்பம் முக்கியமாகும். உத்ஸவத்திற்கு தீர்த்தம் முக்கியம்.

तिथौ व्रतस्य योमासः समासस्तु प्रधानकः ।
अन्यमासेतु आरब्धा सापूजा निष्फला भवेत् ॥

— वचन रत्नावली

விரதாரம்பத்திற்கு எந்தமாதம் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த மாதத்தில் ஆரம்பம் செய்யவேண்டும். வேறு மாதத் தில் ஆரம்பித்தால் அது பலனைக் கொடாது.

मासे चाश्वयुजे शुक्ल प्रथमायां विशेषतः ।
ध्वजमारोपयेद्विद्वान्सर्वलोक हिताय च ॥

ஆசாரியன் ஸர்வலோகஹிதத்தின்பொருட்டு ஐப்பசி மாத சுக்லபக்ஷப் பிரதமையில் துவஜாரோஹணம் செய்ய வேண்டும்.

இவ்வாறு கூறப்படும் இவைபோன்ற பல விதிகளால் சாந்திரமான ரீதியாக ஆச்வின சுக்லபக்ஷ பிரதமையில் ஆரம்பம் செய்து ஷஷ்டி முடிய உத்ஸவத்தைச் செய்ய வேண்டும்.

சுப்பிரமண்யக் கடவுள் சரத்கால சுக்லபக்ஷ ஷஷ்டியில் அபரான்னத்தில் நடுப்பகுதியில் சூரசம்ஹாரத்தைச் செய்தார். ஆகையால் ஸ்கந்தஷஷ்டி உத்ஸவ முடிவில் அரசருக்கு சத்ரு ஜயமுண்டாதற் பொருட்டு சூரசம்ஹாரம் என்ற லீலையைச் செய்தல் வேண்டும். துலாமாதம் சுக்லபக்ஷ பிரதமையில் தொடங்கி ஷஷ்டி முடிய விரதோத்ஸவத்தைச் சாஸ்திரத்தில் கூறியபடி அனுஷ்டிக்கவேண்டும். ஷஷ்டியன்று இராத்திரி சர்வலோக நன்மையின் பொருட்டு துவஜாவரோஹணம் செய்து திக்பாலர்களையும் விசர்ஜனம் செய்து உத்ஸவத்தைப் பூர்த்திசெய்யவேண்டும். — ஆகமசேகரம்.

உத்ஸவம் :

सव इत्युच्यते सृष्टिः तदुत्स्यात् शब्दभाषितम् ।
उत्भूत सृष्टिकारित्वात् उत्सवः परिपठ्यते ॥

உத்ஸவம் என்பது உத்தமயாகம் எனவும், மேலான பஞ்சகிருத்யம் எனவும், சிருஷ்டி மார்க்கத்தைக் குறிப்பது எனவும், போக மோக்ஷங்களைக் கொடுப்பது எனவும் பொருள் படும்.

நித்யோத்ஸவம், நைமித்திகோத்ஸவம், காம்யோத்ஸவம் என மூன்றுவிதமாம். தினம்தோறும் நித்யபூஜாந்தத்தில் செய்வது நித்யோத்ஸவம், வருஷந்தோறும் குறித்த மாதத்தில் வரும் திதி நக்ஷத்திரம் சங்கராந்தி என்பவற்றுள் ஒன்றை அந்தமாக வைத்து நடத்துவது நைமித்திகம், எஜமானனின் விருப்பப்படி இஷ்ட காலத்தில் செய்வது காம்யம். மற்றும் வாரோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாசோத்ஸவம் என்னும் மூன்று விதமாம்.

तीर्थमादौ विनिश्चित्य तत्पूर्वे त्रिगुणेपिवा ।
द्विगुणे तद्दिनेवापि ध्वजारोहण मारभेत् ॥

— कामिकम्

முதலில் தீர்த்ததினத்தை நிச்சயம் செய்துகொண்டு அதற்குமுன் செய்யப்படும் மஹோத்ஸவ தின சங்கியையின் படி துவஜாரோஹணம் செய்யவேண்டும், இது சௌரமானத் தினால் செய்யப்படும் உத்ஸவம் ஆதலால் அந்தமாத நக்ஷத் திரத்தை நிர்ணயம் செய்துகொண்டு அதற்குமுன் உத்ஸ வாரம்பம் செய்யவேண்டும்.

( தொடரும் )

**கடிதம் :**

கி. வா. ஜகந்நாதன்
'கலைமகள்' ஆசிரியர், சென்னை. 29—3—73.

தருமம் வளர்க்கும் தருமபுரத்
தகவார் பதியில் சைவநலம்
பெருகும் படியும் தமிழ்மொழியைப்
பேணி வளர்ச்சி யுறும்படியும்
மருவும் ஆட்சி புரிந்துதவம்
மங்கா தோங்கும் சண்முகப்பேர்
குரவன் முன்னர் என்வணக்கம்
கூறி உரைக்கும் மடல்காண்க.

துறவரசாம் நினைக்கண்டு பேசுகின்ற பொழுதெல்லாம்
துள்ளும் இன்பம் ;
மறந்திடவே சிறிதுமின்றி ஞானகுரு திருவடியை
வழுத்தும் பண்பும்,
அறந்தவறு தாற்றுகின்ற நல்லியல்பும், தமிழ்ப்புலவர்க்
கன்பு செய்து
சிறந்தஉப சாரம்செய் பாங்கும்கண் டுவந்துமனம்
தேர்ந்தேன் நன்கு.

சென்னையில் இருந்த காலத்
திகழ்தரு மன்பே இன்றும்
மன்னுறல் கண்டேன் ; என்னே
மாட்சிசார் எளிமை என்றே
உள்ளினேன் ; பதவி யாலே
ஓங்குதல் பண்பி னாலே
துன்னுறக் கண்டேன் ; நின்றன்
சுகம்நனி ஓங்க வாழி !

என்னுடைய நூல்கள்சில முன்னர்க் கண்டே
இனியவெனத் திருவுளத்தில் கொண்டி ருத்தல்
நன்னரறிந் துவந்துள்ளேன் ; பின்னும் நூல்கள்
நானெழுதி விட்டதுண்டு ; நின்றிருக்கண்
துன்னுகின்ற பார்வைபெற வேண்டு மென்றே
துலங்குமென்றன் நூல்களினை இந்நாள் உய்த்தேன்
அன்னவைநின் திருப்பார்வைக் கிலக்கா கின்ற
ஆர்வத்தேன் ; நின்னலங்கள் வாழி ! வாழி !

# செய்திகள்

## பங்குனி உத்திரத் திருநாள்

**திருபுவனத்தில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திரத் திருநாள் 10—3—73 சனிக்கிழமை முதல் தொடங்கி 19—3—73 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 14—3—73 அன்று பெருமான் தன்னைத்தான் அருச்சித்தல் திருவிழாவும், சகோபுரத்தில் இடப வாகனக் காட்சியும், 16—3—73 அன்று ஸ்ரீ தர்மசம்வர்த்தினி அம்பாள் சமேத ஸ்ரீ கம்பகரேசுவரருக்குத் திருக்கல்யாணமும், 18—3—73 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 19—3—73 அன்று உருத்திரபாதத் தீர்த்தம் கொடுத்தருளலும் நிகழ்ந்தன.

திருவிழா நாட்களில் நாள்தோறும் மாலையில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. 11—3—73 அன்று டாக்டர். திரு. சொ. சிங்காரவேலனர், 'கண்ணப்ப நாயனர்' என்ற தலைப்பிலும், 12—3—73 அன்று திருப்பனந்தாள் திரு. மு. சுந்தரேசம் பிள்ளை 'சண்டேசுவர நாயனர்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். பின்னர் மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரால் வள்ளி கல்யாணம் பொம்மலாட்டமாக நிகழ்த்தப் பெற்றது. 13—3—73 அன்று வேலூர் வித்துவான். திரு. முருகையா தேசிகர், திரு. வி. சபேசன், திரு. இரா. செல்வக் கணபதி ஆகியோர் முறையே 'மானக்கஞ்சாற நாயனர்', 'பழிக்கஞ்சிய சொக்கர்', 'மண்சுமந்த மறையோன்' என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். 14—3—73 அன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நிகழ்ந்தன. திருப்பனந்தாள் திரு. கே. எம். வேங்கடராமையா, M. A., B. O L., அவர்கள் சிறுத்தொண்ட நாயனர் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றி, தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்கள். மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், 'வழக்குரைத்த வள்ளல்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர்கள். அடுத்து, பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு

யானைமேல் திருமுறைகளின் திருவீதியுலா நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் சொற்பொழிவுகளைக் கேட்டும், வழிபட்டும் இறையருள் பெற்றுய்ந்தனர்.

## ஸ்ரீ சரபேஸ்வரர் உற்சவம்

25—3—73 ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீ சரபேஸ்வரர் உற்சவம் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடனும், ஏகதின லக்ஷார்ச்சனையுடனும் சிறப்பாக நடைபெற்றது. லக்ஷார்ச்சனை காலையில் தொடங்கி மாலையில் நிறைவுற்றது. இரவு வெள்ளி மிரதத்தில் ஸ்ரீ சரபேஸ்வரர் திருவீதியுலாக் காட்சி சிறந்த நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு திருவருட் பிரசாதம் வழங்கியருளினார்கள். அன்பர்கள் பலர் வழிபட்டுத் திருவருள்பெற்றனர்.

### வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திரத்திருவிழா 10—3—73 சனிக்கிழமை முதல் தொடங்கி, 19—3—73 முடிய உள்ள நாட்களில் நடைபெற்றது.

விழா நாட்களில் திருவிளையாடற் புராணம் பெரிய புராணம் பற்றிய சொற்பொழிவுகள் 11—3—73 முதல் 14—3—73 முடிய உள்ள நாட்களில் நடைபெற்றன. திருப்பனந்தாள், திரு. தா. ம. வெள்ளைவாரணம், திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. கு. சுந்தரமூர்த்தி, M. A., திரு. வி. சபேசன், மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர். திருமதி. ப. நீலா, திரு. இரா செல்வக்கணபதி ஆகியோர் முறையே, ‘சாக்கிய நாயனார்’, ‘கரும்பருத்திய சித்தர்’ ‘எறிபத்த நாயனார்’ ‘பாலூட்டிய பரமன்’, ‘திருநீலகண்டர்’, ‘காரைக்காலம்மையார்’, ‘வலை வீசிய கோமான்’ என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

13—3—73 செவ்வாய்க்கிழமை அன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன. மகா வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் சொற்பொழிவு நிகழ்ச்சிக்குப் பின்னர் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா

நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் சொற்பொழிவுகளைக்கேட்டும், வழிபட்டும் இறையருள் பெற்றனர். 14—3—73 அன்று சொற்பொழிவு நிகழ்ச்சிக்குப்பின்னர் மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரால் "மாணிக்கவாசகர்" வரலாறு பொம்மலாட்டமாக நிகழ்த்திக் காட்டப்பட்டது.

## பேரளத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாத தீர்த்தத் திருநாள் ஏகதின உற்சவமாக 19—3—73 திங்கட்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை பஞ்சமூர்த்திகளும், இடபாரூடராய் எழுந்தருளி அக்னி புஷ்கரணி தீர்த்தத்தில் உருத்திரபாதத் தீர்த்தம் கொடுத்தருளுதலும், இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா சிறந்த நாதசுர இன்னிசை, வாணவேடிக்கைகளுடனும் சிறப்பாக நிகழ்ந்தன. அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், புலவர், இரா. செல்வக்கணபதி அவர்கள் "அப்பர் விருந்து" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

### சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

## சிவராத்திரி விழா

சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் 3—3—73 அன்று சிவராத்திரிவிழா, இந்து சமய அறநிலைய ஆணையரின் நேர்முக உதவியாளர் திரு. K. இராஜா B. A., B. L., அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தலைமையுரையில், சிவராத்திரிச் சிறப்பை விளக்கி எல்லோரும் சிவபூஜை செய்யவேண்டும். சிவபூஜை செய்ய இயலாதவர்கள் சிவராத்திரியன்று நான்கு காலங்களிலும் திருக்கோயிலுக்குச் சென்று இறைவழிபாடு செய்யவேண்டும் என்றுகூறி, இந்தப் பிரசார நிலையத்தோடு தாம் பல ஆண்டுகளாகத் தொடர்புகொண்டு இந்நிலைய நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வருவதாகவும் குறிப்பிட்டார்கள்.

அடுத்து, யாழ்ப்பாணம் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் "மகாசிவராத்திரி மகிமை" என்ற பொருளில் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். பின்னர்,

மும்மொழிக்கொண்டல். திரு. பி. திருஞானசம்பந்தம் M.A.L.T. அவர்கள் மயிலை கற்பகாம்பாள் திருவருட் சங்கத் தலைவர் ஸ்ரீமதி வசுமதி இராமசாமி அவர்களது பஜனையைத் தொடங்கி வைத்தார்கள். பஜனையில் அபிராமி அந்தாதிப் பாடல் இன்னிசைப் பாராயணமாக நிகழ்த்தப்பெற்றது. வித்துவான், ஸ்ரீமத், மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறி சிவராத்திரி விழாவை இனிது நிகழ்த்தினார்கள்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 11—3—73 அன்று நிகழ்ந்த வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாவிற்குத் தலைமையேற்ற டாக்டர், திரு. M. நடராஜன் அவர்கள், தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சென்னை மக்களை நல்வழிப் படுத்த, இந்த நிலையத்தை வாங்கி சமயப் பிரசாரத்திற்கும் ஏற்பாடு செய்துள்ளார்கள். மேலும், வேளூர் கிருத்திகைப் பிரசாதம் இங்கே கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். அந்த வாய்ப்பை நாம் இன்றும் பெற்று மகிழ்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். மேலும். தம்மைப்போன்ற டாக்டர்கள், இறைவனுக்கு இடையில் இருந்து சிகிச்சை செய்யக்கூடிய தூதுவர்கள்தான் என்றும், நம்போன்றவர்களின் வினையைத் தீர்க்க வல்லவன் இறைவனே என்றும் குறிப்பிட்டார்கள், நிலைய தேவார வகுப்பு ஆசிரியர் திரு. சு. ஞானப்பிரகாசம். திரு. P. வடிவேல் பிள்ளை. திரு. இராமமூர்த்தி அய்யர் முதலியோர் வேளூர்த் தேவாரம், திருப்புகழ்ப் பாராயணம் நிகழ்த்தினர். நன்றியுரைக்குப் பின்னர் அன்பர்களுக்கு சந்தனக் குழம்பு, விபூதிப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு, சென்னை பூந்தமல்லி ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயிலில் 25—3—73 அன்று, சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார அர்ச்சனை ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. திரு. சு, ஞானப்பிரகாசம், திரு. N. இராம மூர்த்தி அய்யர், திரு. க. சுவாமிநாதன் ஆகியோரும் உள்ளூர் அன்பர்களும் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். வழிபாட்டிற்குப் பின்னர் நிகழ்ந்த சமயப்பிரசாரக் கூட்டத்தில், திரு.

ஆங்கீரச வேங்கடேச சர்மா, திரு. C. செல்வநடராஜ முதலியார், திரு. V. N. ஆறுமுகம் ஆகியோரும், நிலையம் ஸ்ரீமத். சுவாமிகளும், சமய வழிபாட்டின் இன்றியமையாமை பற்றிச் சொற்பொழிவாற்றினர். திருக்கோயிலில் திருப்பணி நடைபெறுவதால் திருப்பணிக்காக மாதாந்திர வழிபாட்டு அன்பர்களால் அளிக்கப்பெற்ற சிறுதொகை ரூ. 76–50 அறங்காவலரிடம் கொடுக்கப்பெற்றது.

## நாயன்மார்கள் குருபூஜைவிழா

சைவசமய அறுபத்துமூன்று நாயன்மார்களில் கோச்செங்கட்சோழ நாயனர், காரைக்காலம்மையார், தண்டியடிகள் நாயனர் குருபூஜை விழாக்கள் முறையே 4—3—73, 22—3—73, 31—3—73 ஆகிய நாட்களில் சிறப்பாக நடைபெற்றன. தேவார வகுப்பு ஆசிரியர், மாணவர்களால் திருமுறைப்பாராயணமும், அன்பர்களால் வழிபாடும் நிகழ்த்தப்பட்டன. குருபூஜை நாட்களில் நாயன்மார்களின் புராண விரிவுரைக்குப் பின்னர் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

நாகமலையில்

## ‘பாலர் இல்லம்’ புதுக்கட்டிடத் திறப்புவிழா

திக்கற்ற ஏழைக் குழந்தைகள் வாழ்வும் வளமும் பெறப் பல ஆண்டுகளாகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு "பாலர் இல்லத்தைத்" தோற்றி 120 குழந்தைகளுக்குத் தாயாகவும், தந்தையாகவும் விளங்கிவரும் திருமதி. புஷ்பம் நடராஜன் அவர்களும், திரு. நடராஜ நாடார் அவர்களும் நன்றியோடு பாராட்டத்தக்கவர்கள். விடா முயற்சியும், பெரும் பொருட் செலவும் செய்து மதுரையை அடுத்த நாகமலையில் "பாலர் இல்லத்திற்கு" இவர்கள் உருவாக்கிய புதிய கட்டிடத்தை 19—3—73 இல் திறந்துவைத்த தமிழ்நாடு ஆளுநர் மேதகு. கே. கே. ஷா அவர்கள், இங்கே பயிலும் குழந்தைகளுக்கு உணவு உடை நல்குவதோடு, கல்வியையும், கடவுள் பக்தியையும், பண்பாட்டையும் சேர்த்து வழங்கும் திரு. நடராஜ நாடார் தம்பதிகளைப் பாராட்டியது முற்றிலும் பொருத்தமானதேயாகும்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விழாச் சிறக்கவும், இத்தம்பதியர்களின் நன்முயற்சிகள் வெற்றியடையவும் வாழ்த்தி ஆசிச் செய்தி அனுப்பியருளினர்கள்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

( பிரமாதீசஹூ சித்திரைமீ 1வ முதல் 30வ முடிய )

( 13—4—73 முதல் 12—5—73 முடிய )

ஷை சித்திரை மாதம் முதல்தேதி சுக்கிரவாரம் மகநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 23-51 க்கு மகநக்ஷத்திரமும் சிம்மலக்கினமும் கூடிய சுபதினத்தில் லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் நூதன வருஷ பிரவேசமாக பிரமாதீசவருஷம் சித்திரைமாதம் வருஷபிரவேசம் செய்கிருர். பிரவேசகாலத்தில் மேஷத்தில்சூரியனும், சிம்மத்தில் சந்திரனும், மகரத்தில் செவ்வாயும், மீனத்தில்புதனும், மகரத்தில் குருவும், மீனத்தில் சுக்கிரனும், விருஷபத்தில் சனியும், தனுஸில் ராகுவும்,மிதுனத்தில் கேதுவும், சஞ்சாரம் செய்கின்றனர். ஸௌரமாசசங்கிரமணம் ஸ்ரீ சூரிய பகவான் செய்கிருர். அதனுடைய பலன் உலகம் பூராவும் சகல பிரஜைகளும் ராஜாங்கங்களும் சந்தோஷகரத்துடனும் தன தான்ய ஸமிருத்தியுடனும், ஆரோக்கியத்துடனும் மங்களகரமாய் தெய்வசக்தியுடன் சுகவாழ்வு நடத்திவர ஸர்வேசுவரன் அருள் புரிவாராக.

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும், விவாகாதி சுபகாரியங்கள் நடைபெறும். தனதான்ய விருத்திஏற்படும். கிரய விக்கிரயங்கள் ஏற்படும். நூதனமாக தேவதாராதனங்கள் செய்யும்படி நேரிடும், சுகமான வாழ்வு ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். புதிதான உத்தியோகமும் இடம் மாறுதலும் ஏற்படும். கீர்த்திபத்திரம்

கிடைக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு ஏற்படும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமான சுப பலனைத் தரும். அலைச்சல்கள், சஞ்சாரங்கள், அதிகமாகும். வியாதி குணமாகும். தெய்வபக்தியும், குருபக்தியும் உண்டாகும். உறவினர்களால் அதிகமான செலவு ஏற்படும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத் தரும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் கிரய விக்கிரயங்கள் ஏற்படும். வெகுகாலமாக நடக்காத காரியங்கள் நடக்கும். தெய்வசக்தியால் எல்லாம் நன்மையாகவே நடந்துவரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். ஜீவனம் ஓங்கும். அதிகமான செலவுகள் உண்டாகும். குடும்பத்தொல்லை அதிகமாகும். தெய்வபலத்தால் சுகமான வாழ்வு ஏற்படும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும், சனி, ஞாயிறு சுபமாகும்.

### 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத் தரும். குடும்பத்தில் மங்களகரமான காரியங்கள் அடிக்கடி நடந்து கொண்டு இருக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு அதிகமாகும். ஜீவனம் ஓங்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். அடிக்கடி சுபமான காரியங்களும் தேவதா ஆராதனங்களும், நடந்து

கொண்டு இருக்கும். நஷ்ட தனங்கள் வந்துசேரும். ஜீவனம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமானபலனைத்தரும். குடும்பத்தில் தொல்லை அதிகமாகும். ஆரோக்கியக் குறைவு காட்டும். குடும்பத்தில் கலகங்களும் உறவினர்களின் விரோதங்களும் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ராஜாங்கத்தினால் அடிக்கடி தொல்லைகள் ஏற்படும். செலவுகள் அதிகமாகும். அடிக்கடி அலைச்சல்கள் உண்டுபண்ணும். தெய்வபலத்தால் சகலமும் ஜெயமாகும்.

10. மகரம்-உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அலைச்சல்கள் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வுஏற்படும். குடும்பத் தொல்லை அதிகமாகும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமும் சாத்தியமாகும். செவ்வாய் புதன் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் $\frac{1}{2}$-சதயம் -பூரட்டாதி-$\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். சுபசோபனுதிகளாலும் தெய்வ பிதுரு காரியங்களினாலும் செலவுகள் அதிகமாக இருக்கும், புதிதான கிரஹ நிர்மாணம் தர்மகைங்கர்யம் முதலியவைகளால் உலகத்தில் கீர்த்தி உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம் - பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். தெய்வபலம் முன்னின்று காக்கும். ஜீவனவிஷயத்தில் உயர்வும், ஸ்திரமான ஜீவனமும் ஏற்படும். தேவதா குருபக்தியும் தூரதேச சஞ்சாரமும், மேலோர் பெரியோர்களின் தரிசனமும் கிடைக்கும். சகலமும் மங்களகரமாக நடக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

குறிப்பு :- மேற்படிவருஷம் ஆரம்பத்தில் மந்திரியான சுக்கிரன் அஸ்தமனமாகவும், ராஜா புதன் சித்திரை மாதத்தில் அஸ்தமனமாகவும், பகல் 4 ஆவது யாமத்தில் மேஷ ஸங்கிரமணமும், ஆனிமாதம் அமாவாசையில் சூரிய கிரஹணமும், கார்த்திகை பௌர்ணமியில் சந்திரகிரஹணமும், ஆனிமாதம் 26ந் தேதி சனிபகவான் மிதுனராசியில் கேதுவோடு சேர்ந்து சஞ்சாரமும் ஏற்படுவதால் சகல உலக க்ஷேமத்தின்பொருட்டு ஆங்காங்கு புண்ணிய பூமிகளில் ஸ்ரீ நவக்கிரஹங்களுக்கு கோடியக்ஞங்களும் மகாருத்ரங்களும், ஸ்ரீ சண்டியக்ஞங்களும், மேலோர் பெரியோர்களும், புண்ணியவான்களும், நடத்திக்கொண்டுவர நம் தேசம் பூராவாகவும் விசேஷமாக தக்ஷிண பாரதமும் ஸ்ரீ சர்வேஸ்வரனால் ரக்ஷிக்கப்படும். உலகம் சுபிக்ஷம் அடையும்.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமையாதீனம்

### ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

மிகச்சிறப்பாகக்காப்பாற்றபட்டுவரும்இக்கோயில்தொடர்ந்து நல்ல முறையில் இருந்துவரும் என நம்புகிறேன். என்னை மிகவும் கவர்ந்தது இக்கோயிலின் அமைதியான சூழ்நிலையே.

(S-d) N. Rajasekaran,
D. M, Sirkali.

* * * *

இப்பவும் நான் கடந்த மூன்றுவருடகாலமாக சீகாழி, வைத்தீசுவரன்கோவிலுக்கு வந்துபோகிறேன். மற்ற தென்னிந்திய கோவில்களுக்கும் சென்றுவருகிறேன். பிரதிவருடமும் ஆனால் கோவில் நிர்வாகமும் அத்துடன் கோவிலில் ஒழுக்கமும் மரியாதை முதலியவைகள் பரம திருப்தியுடன் நடந்துவருகிறது. தருமை ஆதீனத்தில் உள்ள கோவில்கள் அரசாங்க நிர்வாகத்தில் உள்ள கோவில்களைவிட தருமை ஆதீனம் அவர்களால் நடத்தப்பட்டுவரும் இந்தக் கோவில் நிர்வாகம் பாராட்டுக்கு உரியவைகளாக உள்ளன. வணக்கம்.

3—4—73. (S-d) Ganapathi

தருமையாதீனம்

“ஞானசம்பந்தம் பதிப்பகம்”

# புத்தக விலைப்பட்டியல்

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கப் பணிபல புரிந்து வரும் தருமையாதீனம் இந்நாள்வரை தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளில் பல்வேறு துறைகளைச்சேர்ந்த 644 நூல்களை வெளியிட்டுள்ளது. இவ்வரிய நூல்களை அன்பர்கள் பலரும் பெற்றுப் பயன் அடைந்து வருகின்றனர்.

தருமையாதீன வெளியீடுகளில் தற்போது சில நூல்களே கைவசம் உள்ளன. அவற்றிற்குரிய விலை விபரம் இவ்விலைப் பட்டியலில் குறிக்கப்பெற்றுள்ளன.

சமயம், சாத்திரம், திருமுறை, இலக்கியம், ஆகமம் போன்ற பல்வேறு துறையைச் சேர்ந்த இவ்வரிய நூல்களை மீண்டும் மீண்டும் பதிப்பித்து வழங்கவும், புதிய நூல்கள் பலவற்றைக் குறைந்த விலையில் வெளியிட்டு உதவவும் திருவுளம்கொண்ட தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப் பெயரால் “ஞானசம்பந்தம் பதிப்பகம்” என்ற அறக்கட்டளையை நிறுவியருளியுள்ளார்கள்.

பட்டியலில் கண்ட நூல்களின் விற்பனைத்தொகை அனைத் தும் “ஞானசம்பந்தம் பதிப்பக” த்தையேசாரும். இத்தொகை பல்வேறு துறைகளில் உள்ள நூல்களைப் பதிப்பித்து வெளியிடப் பயன்படுத்தப்பெறும்.

ரூபாய் ஐம்பதுக்கு மேற்பட்ட மதிப்புடைய நூல்களை ஒரே நேரத்தில் வாங்குபவர்களுக்கு 15% கழிவும், புத்தக விற் பனையாளர்களுக்கு 20% கழிவும் வழங்கப்படும், வேண்டிய நூல் களுக்கு உரிய தொகையைப் பணவிடை (M. O.) உண்டியல் (draft) மூலம் அனுப்பி நூல்களைப் பெறலாம் V. P. P. வழி நூல்கள் அனுப்ப இயலாது. தபால் செலவுகள் தனி.

இவ்வரிய வாய்ப்பினை அன்பர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டுகின்றோம்.

செயலாளர்.

ஞானசம்பந்தம் பதிப்பகம்,

தருமபுர ஆதீனம் – மாயூரம் அஞ்சல்,

தஞ்சாவூர் மாவட்டம்.

| | | ரூ. பை. |
|---|---|---|
| | **திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் :** | |
| 1 | முதல் திருமுறை | 3—50 |
| 2 | இரண்டாம் திருமுறை | 5—00 |
| 3 | மூன்றும் திருமுறை | 5—75 |
| | **திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் :** | |
| 4 | நான்காம் திருமுறை | 8—00 |
| 5 | ஐந்தாம் திருமுறை | 8—00 |
| 6 | ஆறும் திருமுறை | 8—00 |
| | **சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் :** | |
| 7 | ஏழாம் திருமுறை | 8—00 |
| | **மாணிக்கவாசக சுவாமிகள் தேவாரம் ;** | |
| 8 | எட்டாம் திருமுறை. திருவாசகம் - திருக்கோவையார் | 9—00 |
| 9 | ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா - திருப்பல்லாண்டு | 5—50 |
| 10 | அகத்தியர் தேவாரத் திரட்டு | 0—75 |
| 11 | திருமுறை அருச்சனை | 0—25 |
| 12 | தமிழ் அருச்சனை முறை | 0—50 |
| 13 | மெய்கண்ட சாத்திரம் | 3—00 |
| 14 | சித்தாந்தத் தெளிவியல் | 2—75 |
| 15 | மெய்கண்டான் சித்தாந்த மாநாட்டு மலர் | 1—00 |
| 16 | சிவஞான போதம் (உரை நடையுடன்) | 0—25 |
| 17 | சிவஞான சித்தியார் சுபக்கம் (உரை நடையுடன்) | 0—75 |
| 18 | சிவப்பிரகாசம் (உரை நடையுடன்) | 0—25 |
| 19 | சித்தாந்த நூல்கள் 6 (உரை நடையுடன்) | 0—50 |
| 20 | திருவுந்தியாரும் இருபா இருபஃதும் (உரை நடையுடன்) | 0—25 |
| 21 | உண்மை விளக்கம் (உரை நடையுடன்) | 0—25 |
| 22 | சங்கற்ப நிராகணம் (உரை நடையுடன்) | 0—50 |
| 23 | சித்தாந்த அட்டகம் | 0—50 |
| 24 | சைவசித்தாந்த முதற்படி நூல்கள் | 0—25 |
| 25 | சித்தாந்த சைவ வினவிடை | 1—00 |

| | | ரூ. பை. |
|---|---|---|
| 26 | சிவபோகசாரம் (உரை நடையுடன்) | 2—25 |
| 27 | ஞானவரண விளக்கமும் மாபாடியமும் | 10—00 |
| 28 | குருஞானசம்பந்தர் அட்டகம் | 1—00 |
| 29 | திருவருட்பாத் திரட்டு | 1—00 |
| 30 | செந்தமிழ்ப் பூம்பொழில் (2ஆம் தொகுதி) | 1—75 |
| 31 | ,, ,, (3ஆம் தொகுதி) | 1—00 |
| 32 | ,, ,, (4ஆம் தொகுதி) | 2—75 |
| 33 | கந்தபுராணச் சுருக்கம் | 2—00 |
| 34 | கந்தபுராணத் திரட்டு | 2—00 |
| 35 | மண்சுமந்த திருவிளையாடல் | 0—30 |
| 36 | தாயுமான சுவாமிகள் பாடல் | 2—00 |
| 37 | திருநூல் ஐந்து | 0—50 |
| 38 | சந்தானுசாரியர் புராணம் (குறிப்புரை உரை நடையுடன்) | 0—50 |
| 39 | திருத்தொண்டர் திருவந்தாதி | 0—50 |
| 40 | ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை | 0—25 |
| 41 | ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி | 0—25 |
| 42 | கோயில் நான்மணிமாலை | 0—25 |
| 43 | திருக்கழுமல மும்மணிக்கோவை | 0—25 |
| 44 | திருக்கயிலாய ஞான உலா | 0—30 |
| 45 | கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி | 0—25 |
| 46 | பிராசாத நான்மணிகள் | 0—50 |
| 47 | சிவக்ஷேத்திர சிவஞானக்கலிவெண்பா | 0—25 |
| 48 | காசிக்கலம்பகம் | 0—25 |
| 49 | திருக்குறள் - அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்) | 1—50 |
| 50 | சச்ச புட வெண்பா (குறிப்புரையுடன்) | 0—50 |
| 51 | தண்டலையார் சதகம் | 0—50 |
| 52 | கிளிவிடு தூது | 0—25 |
| 53 | பொன்வண்ணத் தந்தாதி | 0—25 |
| 54 | தென்கயிலை வடகயிலைத் திருப்பதிகங்கள் | 0—50 |
| 55 | திருவருட்டுறைப் புராணம் | 1—50 |
| 56 | கந்தக்கடவுள் வாழ்த்தும் வரலாறும் | 0—25 |
| 57 | திருவாலவாய்த் தோத்திரத் திரட்டு | 0—25 |

| | | ரூ. பை. |
|---|---|---|
| 58 | புட்பவிதி | 0—25 |
| 59 | குருவழிபாடு | 1—00 |
| 60 | முத்துக்குமாரசுவாமி அந்தாதி | 0—25 |
| 61 | சைவாநுட்டான அகவல் - சிவபூசை அகவல் | 0—50 |
| 62 | சிவபூசா விதி | 0—50 |
| 63 | சைவானுட்டான விதி | 0—25 |
| 64 | துர்க்கா சப்தசதி விளக்கம் | 1—00 |
| 65 | நித்ய பூஜா லக்ஷண சங்கிரகம் | 1—50 |
| 66 | திருக்கயிலாய யாத்திரை | 5—00 |
| 67 | அமரநாதம் | 3—00 |
| 68 | பசுபதிநாதம் | 3—00 |
| 69 | ஜோதிர்லிங்கத் தலங்கள் | 1—50 |
| 70 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் கனகாபிஷேகவிழாமலர் | 5—00 |
| 71 | புள்ளிருக்கு வேளூர் மகாகும்பாபிஷேக மலர் | 14—00 |
| 72 | திருவையாறு மகாகும்பாபிஷேக மலர் | 5—00 |
| 73 | ஞானசம்பந்தம் வெள்ளிவிழா மலர் | 1—00 |
| 74 | திருவாரூர் ஸ்ரீ அப்பர்சுவாமிகள் குருபூசை விழாமலர் சைவசித்தாந்தம் வினுவிடை | 2—00 |
| 75 | பரமாணுப் புராணம் | 1—25 |
| 76 | Sri Gurngnana Sambandha of Dharmapuram | 1—00 |
| 77 | The Deuelopment of Saivism in South | 2—00 |
| 78 | Studies in Saiva Siddhanta IPart 1) | 1—75 |
| 79 | Saiv - Siddhanta | 1—00 |
| 80 | திருபுவனம் மகாகும்பாபிஷேக மலர் | 3—00 |
| 81 | அஷ்டலக்ஷ்மி (தியானசுலோகங்களுடன்) | 1—00 |
| 82 | சேக்கிழார் நாயனர் புராணம் | 0—25 |
| 83 | பிரம சூத்திரம் | 1—25 |
| 84 | பிரமாதீச வருஷப் பஞ்சாங்கம் | 0—75 |

---

அரிய வாய்ப்பு :— மூவர் அருளிய முதல் ஏழு தேவாரத் திருமுறைகளை (விலை மதிப்பு ரூ. 46—25). ஒருசேர வாங்குவோர்க்கு ரூ. 25—00க்குக் குறைந்த விலையில் தரப்படும். அஞ்சல் செலவு தனி. இத்தொகுதிக்குக் கழிவு இல்லை. குறைந்த தொகுதிகளே கையிருப்பில் உள்ளன. வாய்ப்புக்கு முந்துங்கள்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ ஞானாம்பிகை உடனாய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்

# பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப்பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீஞானப்பிரகாச தேசிகர் அருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தம் குருமூர்த்திகளது அருளாணையின்படி சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்து வருதற்குரிய ஞானபீடத்தை இங்குநிறுவிவீற்றிருந்துஜீவசமாதி கூடிய கோயிலேஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானாம்பிகை உடனாய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு நிகழும் பிரமாதீச ஆண்டு வைகாசித் திங்கள் 1 ஆம் நாள் (14—5—73) திங்கட்கிழமை தொடங்கி பெருவிழா நடைபெறும்.

இந்நாட்களில் "திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும்-சமயப் பயிற்சி வகுப்பும்" நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக்காட்சியைத் தினமும்தரிசித்தும், சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்,
கார்பார்,
**சொக்கநாதத் தம்பிரான்.**

தருமையாதீன
மடாலயம்
பிரமாதீச - சித்திரை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

## சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணை திரு வுருவமாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னாதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமையாதீனக் குருமுதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— சம்பந்த சரணாலயர்.

# ஆதி பரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டியநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சைவவேளாளர் மரபில் ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுப தினத்தில் தோன்றினர். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினர். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் 'உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே' என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயும் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின்பூஜை உணர்வு அவருக்கு முகிழ்த்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினர், அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்றுவந்த நாம், பூஜைப் பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக்கின்றோம்; மூழ்கிப்பெறுக' என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத்தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று ஆனந்தபரவசம் உற்றார். பின், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று; 'பெருமானே, கண்ணுக்கினிய பெருமானாய் என் கரத்தில் வந்த உன்னைப் பூஜிக்கும் நெறியை அருள்புரியவேண்டும்' என்று வேண்டினர். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, 'திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும், சிவபூஜையும் பெறுக' என்று பணித்தருளி, ஞானப்பிரகாசரது கனவிலும் சென்று, 'உன்னிடம் வருகின்ற நம் ஞான

சம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானேபதேசம் செய்து சிவ பூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக' என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக் கடவுள் திரு முன்பு சீடரின் வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கி யிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் எய்தினர். அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாதவெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள், ஞானப் பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கெடுப்போன், ஆங்கு இல்லாமைகண்டு, ஞான சம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது, 'நிற்க, என்று சொல்லி உட்சென்றார். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழைவந்தது; ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார்; குருமூர்த்தியும் கேட்டுவந்து' 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர், தனி இடத்தில் இருந்து உம்மை நாடி ஓடிவரும் கார ணர்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்றார். சீடர்,

" கனக்கும் போதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி ? அப்படி ஆக உரைத்தருளே "

என்று வேண்டினர். அது கேட்டுக் குருமூர்த்திகள், 'தருமபுரம் செல்க' எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர் வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளி னர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதி பரமாசாரிய மூர்த்திகள்.

## சமயப் பயிற்சி வகுப்பு

### அட்டவணை.

| நாள் | கிழமை | காலை மணி 10 - 11 | காலை மணி 11 - 12 | மாலை மணி 3 - 4 |
|---|---|---|---|---|
| 14—5—73 | திங்கள் | "திருவருட்பயன்" சி. அருணைவடிவேல் முதலியார் | "பெரியபுராணம்" அ. ச. ஞானசம்பந்தம் | "வேதம்" பி. இராமதாச ஐயர் |
| 15—5—73 | செவ்வாய் | "சிவஞானபோதம்" கு. சுந்தரமூர்த்தி | "ஆகமம்" எஸ். சுவாமிநாத சிவாசாரியார் | "திருமந்திரம்" ச. தண்டபாணி தேசிகர் |
| 16—5—73 | புதன் | "திருவருட்பயன்" சி. அருணைவடிவேல் முதலியார் | "அறநூல்" ஔவை. து. நடராசன் | "வேதம்" பி. இராமதாச ஐயர் |
| 17—5—73 | வியாழன் | "சிவஞானபோதம்" கு. சுந்தரமூர்த்தி | 'சங்கநூல்" ந. ரா. முருகவேள் | "யோகக்கலை" ச. தண்டபாணி தேசிகர் |
| 18—5—73 | வெள்ளி | "திருவருட்பயன்" சி. அருணைவடிவேல் முதலியார் | "சங்கநூல்" கி. வா. ஜகந்நாதன் | 'வேதம்" பி. இராமதாச ஐயர் |
| 19—5—73 | சனி | "சிவஞானபோதம்" கு. சுந்தரமூர்த்தி | "அறநூல்" சு. சாமிஐயா | "ஆகமம்" எஸ். சுவாமிநாத சிவாசாரியார் |
| 20—5—73 | ஞாயிறு | "திருவருட்பயன்" சி. அருணைவடிவேல் முதலியார் | "திருமுறை" இரத்தினசபாபதி | "ஆகமம்" எஸ். சுவாமிநாத சிவாசாரியார் |
| 21—5—73 | திங்கள் | "சிவஞானபோதம்" கு. சுந்தரமூர்த்தி | "அறநூல்" தெ. ஞானசுந்தரம் | "சமயவிரதங்கள்" வி. சா. குருசாமி தேசிகர் |
| 22—5—73 | செவ்வாய் | "திருவருட்பயன்" சி. அருணைவடிவேல் முதலியார் | "இதிகாசங்கள்" சோ. சத்தியசீலன் | "கலம்பகங்கள்" இரா. செல்வக்கணபதி |
| 23—5—73 | புதன் | — | — | "ஆதீன அருள் நூல்கள்" டாக்டர். சோ. சிங்கார வேலன் |

# திருநாள் விபரம்

| தமிழ் ஞா மீ உ | இங்கிலீஷ் ஞா மீ உ | கிழமை | திரு நாள் | திருநாள் விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை மீ 31 | 13—5—73 | ஞாயிறு | | காலை கணபதி ஹோமம். ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் (மாலை மணி 6-15 to 8-30) விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை. விக்னேசுவர பூஜை. வாஸ்துசாந்தி, மிருத்ஸங்கிரஹணம் அங்குரார்ப்பனம். ரக்ஷாபந்தனம். |
| வைகாசி மீ 1 | 14—5—73 | திங்கள் | 1 | ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 2¼ நாழிகைக்குள் (காலை மணி 6 to 7) ரிஷப லக்னத்தில் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மஹோத்ஸவ துவஜாரோகணம். |
| 2 | 15—5—73 | செவ்வாய் | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| 3 | 16—5—73 | புதன் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக்காட்சி. |

பிரமாதீசஹு

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 17—5—73 | வியாழன் | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி. |
| 5 | 18—5—73 | வெள்ளி | 5 | சகோபுர ரிஷப வாகனக் காட்சி. |
| 6 | 19—5—73 | சனி | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக்காட்சி. |
| 7 | 20—5—73 | ஞாயிறு | 7 | இரவு மணி 8–30க்கு மேல் 10–00க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம்; புஷ்ப விமானம், வெள்ளிரதக்காட்சி. |
| 8 | 21—5—73 | திங்கள் | 8 | குதிரை, கிளி, யானை வாகனக்காட்சி. |
| 9 | 22—5—73 | செவ்வாய் | 9 | காலை (மணி 5 to 6) ரிஷப லக்னத்தில் மஹாரதாரோகணம்; திருத்தேர். |
| 10 | 23—5—73 | புதன் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோஹணம். |
| 11 | 24—5—73 | வியாழன் | | மௌன உற்சவம். |
| 12 | 25—5—73 | வெள்ளி | | சண்டேசுவரர் உற்சவம். |

உ
குருபாதம்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

**14—5—73 திங்கட்கிழமை ]** **[மாலை 6-30 மணி**

**முதல் திருநாள் — சங்கத்தமிழில்**

**வரவேற்புரை :**

**வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
கட்டளை விசாரணை, ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,
வைத்தீசுவரன்கோயில்

**தொடக்கவுரை :**

**மாண்புமிகு. திரு. வி. வி. இராகவன், பி. ஏ., பி. எல்.,**
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

**விரிவுரைகள் :**

செந்தமிழ்வித்தகர்
**திரு. அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ.,**
தமிழ்த்துறைத்தலைவர், மதுரைப் பல்கலைக்கழகம்.
" வாழ்வியல் "

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்,
**திரு. ச. தண்டபாணி தேசிகர்**
திருக்குறள் ஆராய்ச்சித்துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்
" சமயநெறி "

**இரவு 9-00 மணி :**

" மார்க்கண்டேயர் "
**பொம்மலாட்டம்**
**ஸ்ரீ குணநாதர் பொம்மை நாடகசபை, மாயூரம்.**

---

**15—5—73 செவ்வாய்க்கிழமை ]** **[ மாலை 6-30 மணி**

**இரண்டாம் திருநாள் — சங்கத்தமிழில்**

**வரவேற்புரை :**

**வித்துவான். ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
கட்டளை விசாரணை,
ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு.

சிறப்புரை :

மாண்புமிகு. திரு. கே. எஸ். வெங்கட்ராமன் ஐ. சி. எஸ்.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரைகள் :

திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ.,
தமிழ்ப்பேராசிரியர், தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

" கலைத்திறன் "

வித்துவான், திரு. சி. ஜம்புலிங்கம்
தமிழாசிரியர். அ. உ. பள்ளி, அரச்சலூர்.

" அறநெறி "

இரவு 9 மணி :

" தட்சயாகம் "

பொம்மலாட்டம்

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபை, மாயூரம்.

---

16—5—73 புதன்கிழமை ] [ மாலை 6.30 மணி

மூன்றாம் திருநாள் — சங்கத்தமிழில்

வரவேற்புரை :

வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
தருமையாதீன சமயப் பிரசார நிலையம், சென்னை.

சிறப்புரை :

திரு. பி. எஸ். சிவகுருநாதன் பி. ஏ., பி. எல்.,
Former. Labour Tribunal Judge, சென்னை.

விரிவுரைகள் :

திரு. ஔவை. து. நடராஜன் எம். ஏ. எம். லிட்.
இராமலிங்கர் பணிமன்றம், சென்னை.

" அரசியல் "

திரு. அ. கலியபெருமாள் எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

" ஒருமைப்பாடு "

இரவு 9-00 மணி :

"நந்தனார்"

பொம்மலாட்டம்

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபை, மாயூரம்.

---

17—5—73 வியாழக்கிழமை ] [ மாலை 6-30 மணி

நான்காந் திருநாள் — சைவத்தமிழில்

வரவேற்புரை :

ஸ்ரீமத். திருநாவுக்கரசுத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்,
திருக்கடவூர்.

சிறப்புரை :

திரு. எஸ். வி. சிட்டிபாபு எம். ஏ., பி. டி.,
தமிழ்நாடு கல்வித்துறை இயக்குநர், சென்னை.

விரிவுரைகள் :

சித்தாந்தப் புலவர்மணி,
புலவர். திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.,
ஆசிரியர், 'திருக்கோயில்' சென்னை.
"நால்வர் நற்றமிழ்"

பண்டிதவித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.
"மெய்கண்ட தமிழ்"

இரவு 9—00 மணி :

"மாணிக்கவாசகர்"

பொம்மலாட்டம்

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபை, மாயூரம்.

---

18—5—73 வெள்ளிக்கிழமை ] [ மாலை 6-30 மணி

ஐந்தாம் திருநாள் — சைவத்தமிழில்

வரவேற்புரை :

ஸ்ரீமத். சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்
திருபுவனம்.

ஆசியுரை :

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்**
( குன்றக்குடி அடிகளார் எம். எல். சி. )

சிறப்புரை :

மாண்புமிகு. திரு. ஆ. சிதம்பரம் பி. ஏ., பி. எல்.,
மாநிலக் குற்ற இயல் தலைமை நீதிபதி, சென்னை.

விரிவுரைகள் :

வாகீசகலாநிதி, செந்தமிழ்ச் செல்வர்
திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.
ஆசிரியர், ' கலைமகள் ' மைலாப்பூர். சென்னை.
" புராணத் தமிழ் "

இரவு 9-00 மணி :

" சிறுத்தொண்டர் "
பொம்மலாட்டம்
ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபை, மாயூரம்.

---

19—5—73 சனிக்கிழமை ] [ மாலை 6-30 மணி

ஆருந்திருநாள் — சைவத்தமிழில்

வரவேற்புரை :

ஸ்ரீமத். சிவஞானத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை,
ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம், குறுக்கை.

சிறப்புரை :

மாண்புமிகு. திரு. ஆர். சதாசிவம் பி. ஏ., எம். எல்.,
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரைகள் :

தருமையாதீனப்புலவர், சித்தாந்தப்புலவர்மணி,
பாலகவி. வயிநாகரம், திரு. வே. இராமநாதஞ்செட்டியார்
தேவகோட்டை.
" திருமூலர் தெய்வத்தமிழ் "

**வித்துவான். திரு. சு. சாமிஐயா, எம். ஓ. எல்.,**
தமிழ்விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

"பன்னிருவர் பைந்தமிழ்"

**இரவு 9–00 மணி :**

"சிவதாண்டவம்"

**நாட்டிய நாடகம்**

**தில்லை கணபதி கான சங்கீத நாடக சபை சிதம்பரம்,**

---

**20—5—73 ஞாயிற்றுக்கிழமை ]** **[ மாலை 6-30 மணி**

**ஏழாந்திருநாள் — பிரபந்தத்தமிழில்**

வரவேற்புரை :

**சிரோமணி, வித்துவான். திரு. வி. சபேசன்,**
தமிழ்ப்பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

**திரு. மீ. ப. சோமசுந்தரம்**
அகில இந்திய வானொலி நிலையம், சென்னை.

விரிவுரைகள் :

**திரு. வை. இரத்தினசபாபதி, எம். ஏ., பி. ஓ. எல்.,**
முதுகலைப்பேராசிரியர், பேரவைக் கல்லூரி - பூம்புகார்

"சிவப்பிரகாசர் கற்பனை"

திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர்,
**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்**
முதல்வர் (பொறுப்பு) த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

"குமரகுருபரர் இலக்கியம்"

**இரவு 9 மணி :**

"வள்ளித் திருமணம்"

**நாட்டிய நாடகம்**

**தில்லை கணபதி கான சங்கீத நாடகசபை, சிதம்பரம்.**

21—5—73 திங்கட்கிழமை ] [ மாலை 6.30 மணி

எட்டாம் திருநாள் — பிரபந்தத் தமிழில்

வரவேற்புரை :

வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர்
முதல்வர் (பொறுப்பு) த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

மாண்புமிகு. திரு. எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரைகள் :

திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ., டிப் (வடமொழி)
தமிழ் விரிவுரையாளர், கந்தசாமி நாயுடு கல்லூரி, சென்னை.
" பட்டினத்தார் பக்தி "

வித்துவான், திருமதி. ப. நீலா
தமிழ்ப் பேராசிரியை, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
" தாயுமானுர் சமரசம் "

இரவு 9 மணி :

" அன்பே சிவம் "

நாட்டிய நாடகம்

தில்லை கணபதி கான சங்கீத நாடகசபை, சிதம்பரம்.

---

22—5—73 செவ்வாய்க்கிழமை ] [ மாலை 6–30 மணி

ஒன்பதாம் திருநாள் — பிரபந்தத் தமிழில்

வரவேற்புரை :

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்,
தருமையாதீனம்.

சிறப்புரை :

திரு. கே. எஸ். நரசிம்மன் பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ்.
ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

விரிவுரைகள் :

திரு. சோ. சத்தியசீலன் எம். ஏ., பி. டி.,
தமிழ் விரிவுரையாளர், தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

" படிக்காசுப் புலவர் "

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி
தமிழ்ப்பேராசிரியர், த. ஆ. ப, கல்லூரி. தருமபுரம்.

" சிவஞான முனிவர் "

இரவு 9-00 மணி :

" ஸ்ரீ குருஞானசம்பந்தர் "

நாட்டிய நாடகம்

தில்லை கணபதி கான சங்கீத நாடகசபை, சிதம்பரம்.

---

23—5—73 புதன்கிழமை] [காலை 8-00 மணி

பத்தாந்திருநாள் — தருமைத் தமிழில்

## குருபூஜை விழா

வரவேற்புரை :

சிறப்புரை :

மாண்புமிகு. திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல்.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரைகள் :

திருக்குறள்வேள்
திரு. ஜி. வரதராஜபிள்ளை, பி. ஏ.,
திருச்சிராப்பள்ளி

" சிவபோகசாரம் "

தருமையாதீனப்புலவர்
வித்துவான். திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை
சென்னை.

" குருதோத்திரங்கள் "

திருமுறைக்கலைஞர்
வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்
திருச்சிராப்பள்ளி.

" சிவஞான தேசிகர் திருவருட்பா "

23—5—73 ] [ புதன்கிழமை

பத்தாந்திருநாள்

## குருபூஜை விழா

காலை 9-மணி அளவில்

### ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

விழாமலர் :

### நித்தியகன்மநெறி

காலை 11-மணி அளவில்

### ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு

(ஆதீன ஸ்தாபகர்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயில்)

மாலை 6-மணி அளவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

### ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

காவிரித் திருமஞ்சனத்திற்கும், குருமூர்த்த வழிபாட்டிற்கும் எழுந்தருளல்.

---

24—5—73 வியாழக்கிழமை ] [ காலை 8-30 மணி

பட்டணப்பிரவேசத் திருநாள் — தருமைத் தமிழில்

வரவேற்புரை :

சிறப்புரை :

தொழிலதிபர்
திரு. நா. மகாலிங்கம் பி. எஸ்சி. எம். ஐ. இ.
பொள்ளாச்சி.

விரிவுரைகள் -

செஞ்சொற்கொண்டல்
டாக்டர், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்டி.,
தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

" ஆதீன அடியவர் அருள் நூல்கள் "

**வித்துவான். திரு. தா. குருசாமி**
தமிழாசிரியர், மாநகராட்சி உயர்பள்ளி, மதுரை.
" பண்டார மும்மணிக் கோவை "

சிரோமணி, வித்துவான்
**திரு. வி. சபேசன்**
தமிழ்ப்பேராசிரியர், த, ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.
" சொக்கநாத வெண்பா "

காலை 9-00 மணி அளவில்

## ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

நண்பகல்

## மாகேசுவர பூஜை

**மாலை 6-30 மணி**

சமயப்பயிற்சி வகுப்பு நிறைவுவிழா

வரவேற்புரை :

தொடக்கவுரை :

அறப்பணிச்செல்வர்,
டாக்டர். திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை எம். பி. பி. எஸ்.,
சிதம்பரம்.

சிறப்புரை :

மாண்புமிகு. திரு. கே. வீராசாமி பி. ஏ., பி. எல்.
உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி, சென்னை.

வகுப்பு நிறைவுரை :

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்
திரு. சி அருணைவடிவேல் முதலியார்,
தருமையாதீனம்.

இரவு 8 மணி

## இன்னிசை

தருமையாதீன இசைப்புலவர், இசையரசு,
திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் குழுவினர்.

இரவு 10 மணி அளவில்

தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**

## பட்டணப்பிரவேசம்